விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 09 செவ்வாய்க்கிழமை (23.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 186

SATS-TECH ENGINEERS
T20 ICC WORLD TWENTY20 ENGLAND 09
Now available in dishtv & sundirect
New packages & Renewal
Call :-222 5908 / 222 8812

## காயமடைந்த போராளிகளை புலிகளே சுட்டுக்கொன்றனர்


# புலிகள் புரிந்த போர்க்குற்றங்களை ஐ.நா. முதலில் விசாரிக்க வேண்டும்



### இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரின் போது படையினர் நடத்திய தாக்குதல்களில் காயமடைந்த புலி உறுப்பினர்கள் எவரும் படையினரால் கைது செய்யப்படவில்லை. அவர்கள் அவ்வியக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை இந்த விடயம் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)


நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் இன்று கொடியேற்றம்

## இலங்கையர்கள் எவருக்கும் அரசியல் தஞ்சம் வழங்கக் கூடாது

### வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கக் கூடாதென உலக நாடுகளிடம் வெளி விவகார அமைச்சர் றோகித போகொல்லாகம கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்கள் உலகின்பல நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் இலங்கையர்களுக்கு புகலிடம் அளிக்க வேண்டிய அவசியமில்லை என சர்வதேச நாடுகளுக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

நாளை
கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் குழுவினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சை கணக்கீடு

## யாழ்.மாநகரசபைத் தேர்தல் ஐ.தே.க.வேட்பு மனுத் தாக்கல்



### முதன்மை வேட்பாளராக சத்தியேந்திரா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தாக்கல் செய்தது. ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக நேற்று முற்பகல் யாழ்ப்பாணத்திற்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன மற்றும் யாழ்.மாநகர சபைத் தேர்தலில் களமிறங்கும் அக்கட்சியின் (14ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சர் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்

(கொழும்பு)

யாழ். மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் வேட்பு மனுத் தாக்கல் செய்ய அதன் பொதுச் செயலாளரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம ஜெயந்த நாளை யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழ்ப்பாணத்திற்கு வரும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்யவுள்ளார்.

அத்துடன் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நடைபெறும் யாழ். கல்வித்துறை சார்பான மாநாட்டிலும் கலந்து கொள்கின்றார். (ந-5)

## ஏ-9 வீதியில் 8 எரிபொருள் நிலையம்

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கண்டி-யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 வீதியில் புதிதாக எட்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளங்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழான 180 நாட்கள் வேலைத் (14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் எந்த நிலைமையையும் சமாளிக்க படையணிகள் தயார்

### படைத்தரப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் வடக்கில் எந்தவொரு நிலைமையையும் சமாளிக்கும் விதத்தில் கணிசமானளவு படையினர் நிறுத்தப்படவுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. வடக்கே ஐந்து படையணித் தலைமையகங்களின் கீழ் இந்தப் படையணிகள் மீளவும் அங்கு நிறுத்தப்படவுள்ளதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் இரு படையணித் தலைமையகங்கள் அமைக்கப்பட்டு அங்கு இருபடையணிகள் நிறுத்தப்படவுள்ளன. இராணுவத் (14ஆம் பக்கம் பார்க்க)

## மாநகரசபைத் தேர்தலையொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், வவுனியா உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் இறுதித்திகதி வரை ஊர்வலங்கள் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மற்றும் வவுனியா உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் நாளை மறுதினம் நண்பகல் வரை ஏற்கப்படவுள்ளன. (14ஆம் பக்கம் பார்க்க)

## வணங்காமண் கப்பலை இந்தியாவும் திருப்பியனுப்பியது

(சென்னை)

வன்னித் தமிழர்களுக்காக ஐரோப்பிய தமிழர்கள் அனுப்பி வைத்த நிவாரணப் பொருட்களுடன் இலங்கைக்குச் சென்று அங்கிருந்து திருப்பி விடப்பட்டு சென்னை அருகே நின்றுகொண்டிருந்த வணங்காமண் கப்பல் சந்தேகத்திற்குரியதாக இருப்பதாகவும் இந்தியக் கடல் எல்லையை விட்டுச் செல்லுமாறும் இந்தியா நேற்று உத்தரவிட்டது.

இந்த உத்தரவைத் தொடர்ந்து சென்னை அருகே தரித்து (14ஆம் பக்கம் பார்க்க)

## 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை உறவினர்கள் பொறுப்பேற்க முடியும்

### சமூக சேவைகள் அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களிலும் நிவாரணக் கிராமங்களிலும் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்ற 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் 9ஆயிரத்து 247 பேர் நேற்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இம்முதியவர்களை பொறுப்பேற்று பராமரிக்க விரும்பும் உறவினர்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் வவுனியா, மன்னார் பணிமனைகளில் தொடர்பு கொண்டு விடுவிக்க முன்வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவர்களின் பெயர்ப்பட்டியல் இக் காரியாலயங்களில் மக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

இவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 பேர் அடங்குகின்றனர்.

இம்முதியவர்களை பொறுப்பேற்று பாராமரிக்க விரும்பும் அம்முதியவர்களது உறவினர்களின் வசதி கருதி யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முதியவர்களது பெயர், விபரப்பட்டியல் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும்.

# நாடு கடந்த 'தமிழீழ அரசு' எமக்கு எதுவுமே தெரியாது

## மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசாங்க மொன்றை அமைப்பது என்ற விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரிவினரின் தீர்மானம்குறித்து இலங்கையில் வாழும் எந்த தமிழர்களுடனும் கலந்தாலோசிக்கப்படவில்லையெனத் தெரிய வருகிறது.

இவ்வாறான அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு அமைக்கப்பட்டிருக்கும் செயற் குழுவில் இலங்கையில்வாழும் தமிழர்கள் எவரும் இணைத்துக் கொள்ளப்பட வில்லையென இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எம்முடன் இது பற்றி ஆலோசிக்கப்படவில்லை. இவ்வாறான அரசாங்கம் குறித்து நாம் ஊடகங்கள் வாயிலாகவே அறிந்து கொண்டோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கூறினார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமிழர்களுக்கு உதவியளிக்கும் வகையில் அமைந்திருக்குமா என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மாவை சேனாதிராஜா இது பற்றி தற்பொழுது கருத்துக் கூறமுடியாது. அவர்களின் செயற்பாடுகள் குறித்த அறிக்கைகள் வெளியான பின்னரே இதுபற்றிய நிலைப்பாடொன்றை எடுக்க முடியும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அமைக்கும் விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடையதோ அல்லது இலங்கையிலுள்ள எந்தவொரு தமிழ் அமைப்பினதோ நேரடி மற்றும் உடனடிக்கவனத்தைபெற்றிருக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான விடுதலைப் போராட்டம் இன்று புதியதோர் கட்டத்தை எட்டியிருப்பதால் தாயகத்தின் யதார்த்த நிலையினைப் புரிந்து கொண்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் வெளிவிவகாரப் பொறுப்பாளர் பத்மநாதன் அறிவித்திருந்தார்.



இதற்காக விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர்களில் ஒருவராகவிருந்த விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தலைமையில் செயற்குழு வொன்றை அமைத்திருப்பதாகவும் பத்மநாதன் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அதே நேரம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கனவிலேயே அமைக்கப்படுமென இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம அண்மையில் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-5)

# ஏற்கனவே இடம் பெயர்ந்த மக்கள் துரித கதியில் மீளக் குடியமர்த்தப்படுவர்

## குருநகர் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ்





(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டுக்குள் ஏற்கனவே இடம் பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்ற மக்கள்அனைவரும் அவர்களது ஜீவனோபாயம் உறுதி செய்யப்பட்டு தத்தமது சொந்த இருப்பிடங்களில் வெகு விரைவில் குடியமர்த்தப் படுவார்கள் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலர்ளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குருநகர் புனித ஜேம்ஸ் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுவரை காலமும் தமிழ் தரப்பு தலைமைகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் எதிர்ப்பு அரசியலானது எமது மக்களுக்கு எந்த விதமானபயன்களையும்பெற்றுத் தரவில்லையென்பதையும் அது எமது மக்களுக்கான அழிவுகளுக்கே துணை போயிருக்கிறது என்பதனையும் எமது மக்கள் இன்று நன்கு உணர்ந்திருக்கிறார்கள் . எமது மக்களின் அன்றாட மற்றும் எதிர்கால நலன்களுக்காகவே நாம் இணக்க அரசியலில் ஈடுபட்டு வருகிறோம்.

எமது மக்கள் பல்வேறு துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்து இருந்த போதெல்லாம் நாம் அம்மக்களை தனித்து விட்டு விட்டு ஓடிப்போகவில்லை. தங்களது சுயலாபங்களுக்காக குறுகிய அரசியல் கொள்கைகளில் வாழ்ந்து வருபவர்கள் மக்களை அழிவுக்குள் தள்ளி விட்டு ஓடி ஒளிந்து கொண்டனர்.

இப்போது எமது மக்கள் தங்களது துன்ப துயரங்களில் இருந்து மீட்சி பெற நல்லதொரு காலம் உருவாகி வருகிறது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் மீண்டும் எமது மக்களை குழப்பி அதன் மூலம் தங்களது குறுகிய சுயலாப அரசியலை முன்னெடுப்பதற்கு சிலர் முயற்சித்து வருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார். (ந)

## நயினை உற்சவத்தை முன்னிட்டு பண்ணை சோதனை சாவடி அதிகாலை முதல் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். பண்ணை இராணுவ சோதனைச்சாவடி இன்று முதல் தினமும் அதிகாலை 5.30 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை திறந்திருக்குமென வேலணை பிரதேச செயலாளர் எம்.நந்தகோபாலன் அறிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபர் க.கணேஷின் நடவடிக்கையின் மூலம் இந்த அறிவிப்பை நேற்று படையினர் விடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நயினாதீவு இறங்கு துறையின் புனரமைப்பு வேலைகள் இன்னும் இரண்டு தினங்களில் முடிபடையுமெனவும் வேலணை பிரதேச செயலாளர் எம். நந்தகோபாலன் தெரிவித்தார்.

(ந-5)

# பன்றிக் காய்ச்சல் அபாயம் யாழ்ப்பாணத்தில் இல்லை

## யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பன்றிக் காய்ச்சல் பரவும் ஆபத்து இல்லையென யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அண்மையில் அவுஸ்ரேலியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த நால்வருக்கு பன்றிக் காய்ச்சல் நோய் இருப்பது கொழும்பில் கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து இந் நோய் இலங்கையில் பரவாமல் தடுக்கும் நோக்குடன் இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் சிங்கப்பூரிலிருந்து கொழும்பிற்கு ஒரே விமானத்தில் பயணம் செய்து இலங்கையை வந்தடைந்த அனைவரையும் தனிப்படுத்தி கண்காணிக்குமாறு சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு எமக்கு பணித்திருந்தது.

அதனடிப்படையில் யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்த பயணி ஒருவர் அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்தார். இவரிடம் எந்த விதமான நோய் அறிகுறிகளும் காணப்படவில்லை. எனவே சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் அறிவுறுத்தலுக்கமைய இவரை தனிமைப்படுத்தலிலிருந்தும் கண் காணிப்பிலிருந்தும் விடுவிக்கின்றோம். இவர் மூலம் பன்றிக் காய்ச்சல் எவருக்கும் தொற்ற வாய்ப்பில்லை என்பதனை பகிரங்கமாக அறியத் தருகிறோம்.

(ந)

# தமிழ் மக்களை சகோதரர் எனக்கூறும் ஜனாதிபதி அந்த மக்களுக்கு என்ன செய்தார்?

## யாழ் வந்த டாக்டர் ஜயலத் கேள்வி



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் எமது சகோதரர்கள் எனக் கூறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை செயற்பாட்டில் ,காட்டவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்.மாநகர சபைத் தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக வேட்பு மனுத் தாக்கல் செய்ய நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்த அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது ,

தமிழ் மக்கள் எனது சகோதரர்கள் ,தமிழ்ப் பிள்ளைகள் எனது பிள்ளைகள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார். ஆனால் அவர் அதனை செயற்பாட்டில் காண்பித்து தமிழ் மக்களுக்கு ஒரு அமைதியான வாழ்வை அளிக்கவில்லை.

மோதல்களால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை சென்று பார்வையிட எனக்கு அனுமதி வழங்கவில்லை.

நான் ஒரு அரசியல்வாதியாக அந்த மக்களை சந்திக்க விரும்பவில்லை. ஒரு மருத்துவராகவே சந்திக்க அரசிடம் அனுமதி கேட்டேன்.

ஆனால் அரசு மதவாச்சி சோதனைச் சாவடிக்கு அப்பால் வவுனியா செல்ல எனக்கு அனுமதியளிக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சியிலிருக்குமாயின் போர் முடிபடைந்து ஒரு வாரத்தில் ஏ-9 பாதையை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைத்திருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி யாழ்.மாநகர சபை ஆட்சியை கைப்பற்றுமானால் விரைவில் யாழ்.நகரம் நவீன மயப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார். (ந-5)

# இன்று ஒரு தகவல்

## போர் (Bore)

1946 இல் நான் வெளிநாடு போயிருந்த பொழுது... என்று பேசத் தொடங்குவார் ஒரு பெரியவர்.

உடனே பக்கத்திலுள்ளவர்களெல்லாம் மெதுவாக எழுந்து நழுவ ஆரம்பித்து விடுவார்கள்.

ஏன் அப்படி? அந்தக் கதையைக் கேட்க விருப்பம் இல்லையா? இல்லை.

அவர் அந்தக் கதையை ஒரு தடவை சொன்னால் பரவாயில்லை. அதே கதையை 244 ஆவது தடவையாக அல்லவா சொல்ல ஆரம்பிக்கிறார்.

கேட்பவர்களுக்கு போரடிக்காமல் என்ன செய்யும்? அதுதான் தப்பித்து ஓடப்பார்க்கிறார்கள். நாம் பேச ஆரம்பித்தும் எதிரில் உட்கார்ந்திருப்பவர் எழுந்து செல்கிறார் என்று வையுங்கள். நம்மிடம் ஏதோ பிரச்சினை இருக்கிறது என்று அர்த்தம். இதை அலட்சியமாக விட்டுவிடக் கூடாது. என்ன விடயம் என்று சுயமாக ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

இன்றைக்குத் 'தகவலில்' 'போர்' என்பதைப் பற்றி ஒரு சின்ன ஆராய்ச்சி.

போரடிக்கும் நபர்களுக்கு ஒரு முக்கியமான விடயம் தெரிவதில்லை என்கிறார் ஒரு நிபுணர். என்ன தெரியுமா? அவர்கள் அடிக்கிறது 'போர்' என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. அதுதான் கஷ்டம்.

அவர்களுக்கெல்லாம் சொந்த திருப்திதான் முக்கியமாக இருக்கும். அவர்களெல்லாம் Sensitive ஆக இருக்க மாட்டார்கள். தங்களைப் பற்றியே அதிகம் பேசுவார்கள்.

மற்றவர்கள் மத்தியில் நாம் ஒரு போரடிக்கும் நபர் என்று பெயர் வாங்கக்கூடாது என்றால் அதற்கு சில நுணுக்கங்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

மற்றவர்களிடம் எப்பொழுது பார்த்தாலும் நம்மைப் பற்றியும் நம்முடைய குடும்பத்தைப் பற்றியுமே பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

"நான்", "எனது" என்ற வார்த்தைகளை வரிக்குவரி உபயோகப்படுத்தக்கூடாது.

"நேற்றிரவு என் பையன் ஒரு ஜோக் சொன்னான் அது என்னவென்றால்..." என்று சுவாரஸ்யமாக ஆரம்பிப்போம்.

அந்த ஜோக் நமக்கு சுவாரஸ்யமாக இருக்கும். மற்றவர்களுக்கு சுவாரஸ்யமாக இருக்க வேண்டிய அவசியமில்லையே.

சிலருக்கு Mental Mannerism உண்டு.

சிலருக்கு Physical Mannerism உண்டு.

இதுவே மற்றவர்களுக்கு 'Bore' ஆகத் தெரியும். ஒரு குறிப்பிட்ட வார்த்தையை திருப்பித் திருப்பி உபயோகப்படுத்துவது சிலருடைய Mannerism

சரி போரடிக்காமல் இருப்பது எப்படி? சுயமாக சிந்திக்க வேண்டும். நமது விடயங்களில் மட்டும் நாம் Interest எடுக்கக் கூடாது. நம்மை சுற்றியிருக்கும் விடயங்களிலும் Interest எடுத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் Active ஆக இருக்கப் பழக வேண்டும்.

ஒரு வாத்தியார் மாணவர்களைப் பார்த்து "நான் அடுத்த வருடம் ரிட்டயர் ஆகப் போகிறேன்" என்றார்.

உடனே ஒரு மாணவன் அழத் தொடங்கினான். வாத்தியார் அவனுக்கு ஆறுதல் சொன்னார்.

"அழாதேப்பா... இன்னும் ஒருவருடம் உங்களுடன்தான் இருப்பேன். அடுத்த வருடம் தானே ரிட்டயராகப் போகிறேன்" என்றார்.

அவன் கண்ணைத் துடைத்துக் கொண்டு

"நீங்கள் இந்த வருடமே ரிட்டயர் ஆகப் போவதாக அல்லவா நான் நினைத்துக் கொண்டிருந்தேன். இன்னும் ஒரு வருடம் இருக்கிறதே. அது தான் எனக்கு அழுகை வந்துவிட்டது" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கல்வி அமைச்சர் கலந்து கொள்ளும் குடாநாட்டின் கல்வித்துறைசார்ந்த உயர்மட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கல்வித் துறை சார்ந்து நிலவும் பாடசாலைகளின் குறைபாடுகள், தேவைகள், நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள், ஆளனிப் பற்றாக்குறைகள், மாணவர்களது தேவைகள் மற்றும் குறைபாடுகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ள உயர் மட்ட மாநாடொன்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நாளை புதன்கிழமை காலை 10.00 மணியளவில் ஸ்ரான்லி வீதி இலக்கம் 273 இல் அமைந்துள்ள அமைச்சரது பணிமனையில் நடைபெறவுள்ளது.

இவ்வுயர் மட்ட மாநாட்டில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் குடாநாட்டின் கல்வித்துறை சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ⓘ

# பட்டதாரிகள் மற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை இடம்பெறும்

மாகாண ஆசிரிய சேவையில் இரண்டாம் கட்டப் பட்டியலில் நியமனம் பெறாத பட்டதாரிகளுடனான விஷேட சந்திப்பு மற்றும் தொண்டர் ஆசிரியர்களுடனான விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ்தேவா னந்தா தலைமையில் ஸ்ரான்லி வீதி, இல 273 இல் அமைந்துள்ள அமைச்சரின் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இச்சந்திப்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இச்சந்திப்பில் மேற்படி இரண்டாம் கட்டப் பட்டியலில் நியமனம் பெறாத யாழ். குடாநாட்டு பட்டதாரிகள் மற்றும் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளும்படி அழைக்கப்படுகின்றனர். ⓘ

# வடமாகாணத்தில் நீதிமன்ற கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பம்

வடமாகாணத்தில் நீதிமன்ற கட்டமைப்பை வழமைக்கு கொண்டு வருவதற்கான உடனடி வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு தெரிவிக்கின்றது.

இதற்கமைய கிளிநொச்சி பிரதேசத்தில் மேல் நீதிமன்றம் ஒன்றை ஸ்தாபிக்க உள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுதவிர கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு பகுதியிலும் புதிய நீதவான் நீதிமன்றம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது. மல்லாகம் மற்றும் சாவகச்சேரி பிரதேசங்களிலும் நீதவான் நீதிமன்றங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந் நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் அவற்றுக்கான செயற்குழுவினர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார். ⓘ



நிஷா அனர்த்தத்தின் போது உயிரிழந்த பாற்பசுவுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவை கமத்தொழில் காப்புறுதி சபை உதவிப் பணிப்பாளர் து. கிரிதரன் பசுவின் உரிமையாளராகிய கச்சாயை சேர்ந்த சி.சிவனேசனிடம் கையளிப்பதையும் அருகில் சபை உத்தியோகத்தர்களான மா. ஆனந்த குமாரசாமி, ரி. கணேசலிங்கம், திருமதி ஆர். பரம்சோதி, கே. ஸ்ரீகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

யாழ். மாவட்டத்தில் குறுகிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கமத்தொழில் காப்புறுதி திட்டத்தின் மூலம் நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளும் முதல் காப்புறுதியாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(படம் - கோபி)

# இராசி பலன்

23.06.2009
(ஆனி 9 செவ்வாய்க்கிழமை)
பிரதமை முன்னிரவு 11.51 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 11.24 மணிவரை
இராகுகாலம் 2.54-4.24 மணிவரை
சுபநேரம் 10.24-11.54 மணிவரை
நயினை நாக பூசணியம்மை கொடி

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், மாதர் நட்பு, போசன சுகம், பொருள் சேர்க்கை. |
| இடபம் | ஆரோக்கியக் குறைவு, தேவையற்ற பகை, முயற்சி தாமதம். |
| மிதுனம் | கற்பனை மிகுதி, தொழில் முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| கடகம் | சோம்பல் நிலை, உணர்ச்சி வசப்படல், குடும்பக் கவலை, தொழில் முயற்சி. |
| சிங்கம் | தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், சயனசுகம். |
| கன்னி | பிரபுத்தனம், இஷ்டசித்தி, பெரியோரால் மதிக்கப்படுதல், தூர தேசச் செய்தி. |
| துலாம் | சரீரப் பிரயாசை, குடும்பக்க்வலை, திடீர் பயணம், பயந்த சுபாவம். |
| விருச்சிகம் | முழங்கால் வலி, பொருள் விரயம், காரிய தாமதம், போசன சுகம். |
| தனுசு | தேகநலன், செல்வாக்கு, களஸ்திர நன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், குடும்ப நலம், ஆரோக்கிய நிலை. |
| கும்பம் | ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், புத்திரரால் கவலை,தன விரயம். |
| மீனம் | சுபசெய்தி, புதிய முயற்சி மனச் சஞ்சலம், தனவிரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 80 |
| தக்காளி | 300 | 400 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 80 |
| கோவா | -- | -- | -- |
| கரட் | 120 | 140 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 30 | 50 | 40 |
| வாழைக்காய் | 50 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 55 | 70 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 |
| பாகற்காய் | 90 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 50-60 | 70-80 | 80 |
| கரணைக் கிழங்கு | 70 | 80 | -- |
| பயிற்றங்காய் | 90 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 110 | 110 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 50 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 10 |
| தேசிக்காய் | [illegible] | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

## வலி மேற்குப் பிரதேசத்தில் பஸ்தரிப்பு நிலையங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பஸ்தரிப்பு நிலையங்கள் யாவும் துரித கதியில் அமைக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச பொதுமக்கள், வர்த்தகர்கள், பொதுஅமைப்புகள் என அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் இப்பணிக்கு அப் பிரதேச இராணுவமுகாம் பொறுப்பதிகாரிகளும், இராணுவத்தினரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சங்கானை, சுழிபுரம், மூளாய், மாவடி,சங்கரத்தை ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து பஸ்தரிப்பு நிலையங்கள் அடங்குகின்றன. (ஓ-27)

## சிறுவர் நாடகப் போட்டி முடிபுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் நாடகப் போட்டியில் முதலாம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், 2ஆம் இடத்தை யாழ்.பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயமும் 3 ஆம் இடத்தை யாழ்.நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையும் பெற்றுக்கொண்டன. (ஓ-4-19)




## விசேட முத்திரை விநியோக திட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் சமுர்த்தித் திட்டத்தினால் அமுல்படுத்தப்படும் விசேட போசணை முத்திரை விநியோகத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளினதும் போசணையை அதிகரிக்கும் நோக்குடன் சமுர்த்தி கொடுப்பனவு பெறுகின்ற குடும்பத்தில் மேலதிகமாக புதிதாக குழந்தை பெற்றுக்கொண்ட தாய்மார்களுக்கு மாதாந்தம் ரூபா 200 வழங்கப்படவுள்ளது.

குழந்தை பிறந்த மறு மாதத்திலிருந்து 12 மாதங்கள் வரை இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தகுததியுடைய சமுர்த்திப் பயனாளிகள் விரைவாக பிரதேச செயலகத்தின் சமுர்த்தி உத்தியோகத்தரிடம் விண்ணப்பப்படிவங்களை பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு நல்லூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஓ-30)

## சைவநெறிப் போட்டிகள் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள சைவநெறிப் போட்டிக்கான திகதிகள் மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் யூலை மாதம் 3 ஆம் திகதியும் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் யூலை மாதம் 4 ஆம் திகதியும் யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் யூலை மாதம் 5 ஆம் திகதியும் வலய மட்டப் போட்டிகள் யூலை மாதம் 11 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

அத்துடன் போட்டி நடைபெறும் இடங்களில் மாற்றம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் முறையே இம் மாதம் 26, 27, 28 ஆம் திகதிகளிலும் யூலைமாதம் 4ஆம் திகதியும் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## குடாநாட்டு லொறி உரிமையாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

ஏ-9 தரைப் பாதையூடாக குடாநாட்டு உற்பத்திப் பொருட்களை தென்பகுதிக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துரிதமாக மேற்கொண்டு வருகின்றார்.

இதன் பிரகாரம் யாழ்.குடாநாட்டின் உற்பத்திகளை தென்பகுதிக்கு ஏற்றிச் செல்ல விரும்பும் லொறி உரிமையாளர்கள் இல 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சு அலுவலகம் அறிவித்துள்ளது.

தெடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் 222 2367,222 8593 ஆகும். (ஓ)

## சிறந்த தொழில் முயற்சியாளர் விருது வழங்கல் -2009

(யாழ்ப்பாணம்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழிலாளர்கள் மற்றும் கைத்தொழில் துறையிலுள்ள சுயதொழிலாளர்களிடமிருந்து சிறந்த தொழில் முயற்சியாளர் விருது வழங்கல் -2009 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சின் வழிப்படுத்தலின்கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் எதிர்வரும் நவம்பர் மாதம் 26 முதல் 29 வரை தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தக சந்தை 2009 நடத்தப்படவுள்ளது.

இக் கண்காட்சியில் ஜனாதிபதி விருதுக்குத் தகுதிபெறும் தொழில் முயற்சியாளர்கள் மாவட்ட,மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சிறந்த தொழில் முயற்சியாளராகத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தேசிய தங்க விருதுகள், தேசிய வெள்ளி விருதுகள், தேசிய மட்டப் பதக்கங்கள், மாகாண மட்ட சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் பெறுமதியான பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பொருத்தமான ஆவணங்ளின் பிரதிகளுடன் உங்கள் கைத்தொழிலுக்கு உரித்தான அந்தந்த கைத்தொழில் அபிவிருத்திசபையின் மாவட்ட அலுவலகத்திற்கு எதிர்வரும் ஆகீஸ்ட் மாதம் 25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை, *பிரதிப் பணிப்பாளர், கைத்தொழில் அபிவிருத்தி சபை, யாழ்.மாவட்டக் காரியாலயம், தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம், சுண்டுக்குளி* எனும் விலாசத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்-222 2421 (ஓ)

## கைப்பணிப் பொருள் உற்பத்தி போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபை பிளாஸ்ரிக் பொருட்களைக் கட்டுப்படுத்தி பனம் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக் டன் யாழ்.மாவட்டம் முழுவதும் கைப்பணிப் பொருட்கள் உற்பத்திப் போட்டியை நடத்தியது.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**சந்தைக்கூடை**

ஜெ.பிரியா-கோப்பாய் மத்தி, கோ. வாணி-கோப்பாய் மத்தி., ம.அனுஷ்டிகா-மட்டுவில் கிழக்கு.

**கைப்பை**

த.சஞ்ஜீவிதா-யாழ்ப்பாணம், அ.சுஜ தா-யாழ்ப்பாணம், அ.அனுத்தியா-அல்வாய் வடக்கு.

**உமல்பாக்**

ந.ராமராஜ்-அளவெட்டி, த.ஜெயா-அளவெட்டி.

**போத்தல் கூடை**

இ.சஞ்சிதா-அளவெட்டி.

**ஈக்கிள் கூடை**

பொ.இந்திராணி-வல்வெட்டித்துறை, ஜெ. கீதா-மல்லாகம், ம.சர்மிளா-மல்லாகம். (ஓ-30)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(இருபாலை)

இருபாலை கோப்பாய் பிரதேச மக்கள் நலன் காக்கும் பிரிவின் பொதுக் கூட்டமும் நிர்வாகசபைக் கூட்டமும் கலாநிதி லயன் வை.தியாகராசா தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தலைவராக கே.சிவசுந்தரமூர்த்தி, உபதலைவராக கி.தங்கவடிவேல், செயலாளராக தி.உமாசங்கர், உப செயலாளராக இ.அமலன், பொருளாளராக வ.செல்லத்துரை ஆகியோரும் 6 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். (ஓ-25)

## உரும்பிராய் கிழக்குப் பகுதியில் வேல்ட் விஷன் நிறுவன உதவிகள்

உரும்பிராய் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் முயற்சியின் முதற் கட்டமாக உரும்பிராய்கிழக்கு ஒழுங்கமைப்புக்குழு ஊடாக வேல்ட்விஷன் லங்கா நிறுவனம் பயன்தரக்கூடிய ஆடு, பால்மாடுகள் வழங்கியுள்ளது. இவர்களின் உதவி தொடர்ந்து இக்க கிராம மக்களுக்கு கிடைக்கவேண்டுமென்று மேற்படி குழுவின் தலைவர் த.பேரின்ப நாயகம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களையும் தவறாமல் கலந்துகொள்ளும்படி யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது. (ஓ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவையாதீனம் மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூலைமாதம் 1 ஆம் திகதி புதன்கிழமை சண்[illegible]கப்பெருமான் திருநடனமும், 8 ஆம்திகதி [illegible]கிழமை சண்முகார்ச்சனையும், 17 ஆம்திகதி வெள்ளிக்கிழமை திருக்கார்த்திகை விழாவும் சண்முகார்ச்சனையும் 20 ஆம் திகதி இரதோற்சவமும், 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை கண்டகி தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

✠✠✠

(சாவகச்சேரி)

மீசாலை இலஞ்சியாரணியம்பதி மட்டுவில் சோலைஅம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் ஜூலை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4-29)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறவுள்ளது.


இவ் உற்சவத்தில் 29 ஆம் திகதி கைலாச வாகனமும் யூலை 3 ஆம் திகதி மாலை 6 மணிக்கு மஞ்சமும் 5ஆம் திகதி மாலை சப்பறமும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும்இடம்பெறும். (ஓ-136)

## கௌரவ ஆளுநர் விருதுக்கான தேர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கலாசார திணைக்களத்தினால் வருடந் தோறும் நடத்தப்பட்டு வரும் தமிழ் இலக்கிய விழாவில் ஒரு நிகழ்வாக ஆளுநர் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

இதில் ஒவ்வொரு பிரதேச செலகத்திலிருந்தும் 60 வயதிற்கு மேற்பட்ட கலை, இலக்கியம், ஊடகம், இசை, நுண்கலை போன்ற துறைகளில் சாதனை புரிந்த கலைஞர்கள் இருவரின் பெயர் விபரங்களை பிரதேச செயலாளரின் சிபார்சுடன் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு வடமாகாண கலாசார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4-30)



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளிற்கிணங்க தரம் 5 மாணவர்களின் பாட விதானத்திற்குட்பட்ட மூலிகைகளை இனங்காணல், தாவரங்களின் பரம்பல் போன்ற விளக்கங்களைக் காட்சிப்படுத்தல் ஆகவும் செயன்முறை ரீதியாகவும் மாணவர்களுக்கு விளக்கும் நிகழ்வு அண்மையில் இணுவில் மத்திய கல்லூரி மற்றும் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையினரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.இந்நிகழ்வில் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி வி.சத்தியசீலன் கலந்துகொண்டு விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.

# முகாம்களில் உள்ளவர்களின் பாதுகாப்பு சேவைக்கு முக்கிய பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்பு குழு

## மனித உரிமைகள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கானபாதுகாப்புச்சேவையை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்புக்களின் முக்கிய பிரதிநிதிகள் சர்வதேச மற்றும் உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவென்றை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய்ந்து தீர்மானங்களை எடுப்பதற்குக் கொழும்பிலும், வவுனியாவிலும் இந்தக் குழு உருவாக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் கூறினார்.

உரிய பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்பட்டால் அந்தத் தீர்மானம் குறித்து ஊடகங்களில் விவாதம் நடத்தப்படத் தேவையில்லையென மனித உரிமைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்புக்குழு ஏதாவது விடயங்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமாயின் உரிய விதத்தில் கலந்தாலோசித்தே வெளிப்படுத்த வேண்டுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் அக்கறை யுடன் இருப்பதாக சட்டமா அதிபர் மொஹான் பீரிசை மேற்கோள்காட்டி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு அவசியம் எனக் கோரிக்கை விடுத்திருக்கும் சட்டமா அதிபர், அரசாங்கத்துடன் சுதந்திரமாக கருத்துக்களைப் பரிமாறிகொள்வததற்கு அரிய சந்தர்ப்பமொன்று கிடைத்திருப்பதாகவும் கூறினார்.

இடம்பெயர்ந்தவர்களின் நிலைமை மோசமடைந்து செல்லும் நிலையில் அதுபற்றி ஊடகங்களில் விவாதிக்காமல் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி அதனைத் தீர்ப்பதே சிறந்தது என யூ.என்.எச்.சிஆரின் இலங்கைக்கான பிரதிநிதி அமின் எவாட் கூறியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

# நலன்புரி நிலையங்களில் உள்ள முதியவர்களை சமூக நலத்துறை அமைச்சிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள 9 ஆயிரம் முதியவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் நேற்று திங்கட்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சிடம் கையளிக்கப்பட்டனர்.

இவர்களைப் பொறுப்பேற்கும் சமூக சேவைகள் அமைச்சு முதியவர்களைத் தனியாகத் தங்கவைத்துப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் தொடர்புகளைப் பேணி வரும் முதியவர்களை அவர்களிடம் கையளிப்பதற்கும், உறவினர்கள் இன்றித் தனித்து விடப்பட்டிருக்கும் முதியவர்களைத் தனியாகத் தங்கவைத்துப் பராமரிப்பதற்கும் சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நலன்புரிநிலையங்களிலுள்ள முதியவர்கள் சிலர் ஏற்கனவே தமது உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் முகாம்களிலிருந்து வெளியேறியிருந்தனர்.

அத்துடன், முல்லைத்தீவிலிருந்த முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த முதியவர்கள் ஏற்கனவே வவுனியாவிலுள்ள முதியோர் இல்லத்திற்கு மாற்றப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-6)



சங்கத்தானை ஸ்ரீ முருகன் முன்பள்ளியின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் சங்கத்தானை கந்தசாமி கோவில் முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் சி.கனகரத்தினம் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# இலங்கைக்கு உதவி வழங்கும் புதிய நாடுகளை கொண்ட குழுவை அமைக்க அரசு ஆலோசனை

## இந்தியா, சீனா, மத்திய கிழக்கின் சில நாடுகள் இடம்பெறலாம்

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளை விடுத்து புதிய நாடுகளைக் கொண்ட குழுவொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது. இதன்மூலம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு உதவிகளைப் பெறமுடியும் என எதிர்பார்ப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு உதவி வழங்கம் நாடுகள் குழு அமைக்கப்பட்டது.

இணைத்தலைமை நாடுகள் என அழைக்கப்பட்ட இந்தக் குழுவில் ஜப்பான், அமெரிக்கா, நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அங்கம் வகித்தன.

இந்நிலையில், புதிதாக உருவாக்கப்படவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழுவில் இந்தியா, சீனா உள்ளிட்ட மத்திய கிழக்கின் சில நாடுகளும் உள்ளடங்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

அங்கு எங்கு பார்த்தாலும் புத்தகக் காடாகத்தான் காட்சியளித்தது. ஔமாவின் படுக்கைக்கு மேல் ஒரு சித்திரம். ஒரு கறுப்பினப் பெண் இதழ்கள் அவிழும் மலர் ஒன்றினை அண்ணாந்து பார்த்த வண்ணம் இருக்கிறாள்.

அந்தப் படத்தின் கீழ் "எனக்கு ஒரு கனவு உண்டு" என்ற வாசகம் காணப்பட்டது. ஔமா தான் அப்படிப் பல கனவுகளைக் கண்டாளாம். அதன் காரணமாக அவள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

ஒபாமா பயணக் களைப்பு மேலிட படுக்கையில் விழுந்து நித்திரையாகி விட்டார். ஔமா பல்கலைக்கழகத்துக்கு தன் விரிவுரையைத் தொடரச் சென்றுவிட்டாள்.

ஒபாமாவும் ஔமாவும் அன்றிரவை தங்கள் தங்கள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டும், இரவுச் சாப்பாட்டைத் தயார் பண்ணுவதில் பரஸ்பரம் உதவிக் கொண்டும் செலவிட்டனர்.

அடுத்தநாள் காலை இருவரும் நகரத்தைச் சுற்றிப் பார்ப்பதிலீடுபட்டனர். பழைய சந்தையைச் சுற்றிப் பார்த்தனர். அதையடுத்து கிமதி தெருவுக்குச் சென்றனர். கிமதி மௌமௌ புரட்சித்தலைவனாக இருந்தவன். அவன் பயங்கரவாதத்தைப் பரப்பியவன். ஈற்றில் அவன் பிடிபட்டுக் கொல்லப்பட்டான். இதையடுத்து கென்யாட்டா, கென்ய நாட்டின் முதல் ஜனாதிபதியானார். அவரின் முதல் பணியாக வெள்ளையர்கள் தங்கள் தங்கள் வாழ்வைப் பயமின்றித் தொடர உத்தரவாதம் வழங்கினார்.

அவர்கள் செய்து வந்த வர்த்தகம் விவசாயம் ஆகியன நாட்டுடமையாக்கப்படாது என்று அறிவித்தார். இதன் காரணமாக கென்யா மேலை நாடுகளின் செல்லப் பிள்ளையாகியது. உறுதியான அரசு, பொருளாதார முன்னேற்றம் பெருகிய வேலைவாய்ப்புகள் என்பன கென்யாவை முன்மாதிரியான நாடாக்கியது.

உகண்டாவில் ஏற்பட்ட குழப்பம், தஞ்சனியாவில் (Tanzania) தோல்விகண்ட சோஷியலிசம் ஆகியன கென்யாவின் வெற்றி



யை மேலும் பிரகாசமாகக் காட்டியது. முன்னாள் சுதந்திரப் போராட்டவீரர்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பினர். நிர்வாக சேவையிலும் சேர்ந்தனர். சிலர் தேர்தலில் நின்று வென்று பாராளு மன்றம் சென்றனர்.

ஒபாமாவும், ஔமாவும் ஹோட்டல் ஒன்றில் தங்கள் மதிய போசனத்துக்காக மேசையில் அமர்ந்தனர். உல்லாசப் பிரயாணிகள் பலரும் அங்கு காணப்பட்டனர். ஜேர்மனியர்கள், ஜப்பானியர்கள், பிரித்தானியர்கள், அமெரிக்கர்கள் என்று பல தேசத்த வர்கள் வந்து போயினர். அப்போது அங்கு ஒரு அமெரிக்க குடும்பம் வந்தது. இரு ஆபிரிக்கப் பணியாட்கள் அவர்களைக் கண்டதும் விரைந்து வந்து அவர்களுக்கு உணவு பரிமாற ஆவன செய்வதில் காட்டிய ஆர்வமும் சுறுசுறுப்பும் ஔமாவையும் ஒபாமாவையும் சினம் அடையச் செய்தது.

அவர்கள் வெகு நேரமாக யாராலும் கவனிக்கப்படாமல் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒபாமாவுக்கு இந்தப் பணியாளர்களின் பாரபட்சம் புதிய அனுபவமாயிற்று. ஒபாமா பாராமுகமாக நின்று கொண்டிருந்த இருவேறு பணியாட்களை கையசை த்து வரும்படியழைத்தார். சிறிது நேரம் அவர்கள் ஒபாமாவைக் கண்டும் காணாதது போல பாசாங்கு செய்தனர். இறுதியாக வயதில் மூத்தவன் ஒருவன் உணவு விபரங் களடங்கிய மெனு (menu card) அட்டைகள் இரண்டைக் கொடுத்தான். போனவன் திரும்ப வரவில்லை. ஔமாவின் முகம் சிவந்தது. கோபத்தோடு எழுந்தாள். அந்த சேவையாளனைப் பார்த்து "நீ வெட்கப் பட வேண்டும்" என்று கத்தியபோது அவன் சுவாகிலி மொழி யில் ஏதோ கூறினான்.

" நீ பலருக்கு உழைத்துப் போடவேண்டும் என்று சொல்கிறாய். ஆனால் உனது மக்களையே இவ்வளவு கேவலமாக இழிவாக நடத்த உனக்கு வெட்கமாகவில்லையா?" என்று கூறிக்கொண்டு நூறுரூபா நோட்டை எடுத்து அவனுக்கு விட்டெறிந்து விட்டு வீதிக்குச் சென்றாள். அதன்பின் இருவரும் கால் போன போக்கில் நடந்து திரிந்து விட்டு தபாலகம் ஒன்றின் பெஞ்மேல் அமர்ந்தனர்.


82

### ஜம்பொன்

"நான் வேறு ஒரு ஆபிரிக்கப் பெண்ணுடன் இந்தக் ஹோட்டல்களுக்கு செல்ல முடியாது. அப்படிச் சென்றால் எங்களை வெளியே விரட்டியனுப்பிவிடுவார்கள். நாங்கள் அப்பாவிப் பெண்கள் என்றாலும் நம்ப மாட்டார்கள். அவர்கள் கண்களில் கறுப்பினப் பெண்கள் எல்லோருமே விலைமாதர்கள் தான். இதுதான் கென்யா! அதன் மொத்த தேசிய உற்பத்தி (GNP) எவ்வளவுதான் உயர்ந்தாலும் கென்யாவைப் பார்த்து ஏனைய ஆபிரிக்க நாடுகள் ஏளனம் செய்கின்றன. ஆபிரிக்காவின் விலைமாது கென்யா: பணம் படைத்தவர்களைத்தான் அது வரவேற்கும். (தொடரும்)

# தொழில்நுட்பம் சார்ந்த துறைகளை தேர்ந்தெடுப்பது எப்படி ?

எப்படிப்பட்ட பொருளாதாரச் சூழல் இருந்தாலும் சில குறிப்பிட்ட துறையினர் மட்டும் எப்போதும் முன்னேற்றப் பாதையில்தான் பயணிக்கிறார்கள். இறுக்கமான சூழல்க ளில் கூட எளிதாக வெற்றி நடைபோடுபவர்களை கவனித் தால் தெரியும். அவர்களின் திறன்கள் தான் அவர்களது பயணத்தை எளிதாக்குவதை நாம் அறியலாம். தொழில் நுட்பம் சாா்ந்த சில குறிப்பிட்ட பிரிவுகள் எப்போதுமே மேம்பாட்டை மட்டுமே எட்டுகின்றன. அந்த பிரிவுகள் எவை?



டெக்னிக்கல் ரைட்டிங்

கணனி மென்பொருள் தொடர்புடைய அம்சங்களை சாதாரண படிப்பறிவோடு இருப்பவர்களும் கூடப் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதுபவர்கள் டெக்னிக்கல் ரைட்டர்ஸ் தொழில்நுட்ப எழுத்தாளர்கள் ஆவர். சம்பந்தப்பட்ட சொப்ட் வெயர் பற்றிய நுண்ணறிவு. சொப்ட்வெயர் துறையின் பிற அடிப்படை அம்சங்களை அறிந்திருப்பது ஆகியவற்றை பெற்றிருப்பதில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

எழுத்தாற்றல், புதியவற்றை படைக்கும் திறன், விபரங் களை அறிவதில் ஈடுபாடு, மொழித்திறன், தகவல் பரிமாற் றத்திறன் ஆகியவையும் இதற்கு தேவைப்படுகிறது.

டெக்னிக்கல் ரைட்டிங் செய்ய தொழில்நுட்பம் படித்தவ ராக இருக்கவேண்டும் என்ற தேவையில்லை. இன்ஜினி யரிங் படிக்காத திறனாளர்கள் கூட இதைச் செய்ய முடியும். பொதுவாக, இத் துறையில் பெரும்பாலும் பி.ஏ., பி.எஸ், பி.கொம் படித்தவர்களே அதிகம் ஈடுபட்டுள்ளனர். இதில் இத ழியல் படித்திருப்பவர்களும் அதிகம் ஈடுபட்டுள்ளனர். இத் துறைகளுக்கான பயிற்சியானது வாரம்முழுவதுமான அல்லது வார இறுதியிலான வகுப்புக்களில் தரப்படுகிறது.

ஆரம்ப நிலையில் டெக்னிக்கல் ரைட்டராகத் தொடங்கி டீம் லீடர். டொக்குமென்டேஷன் முகாமையாளர், சப்ஜெக்ட் மேட்டர் எக்ஸ்பாா்ட், டெக்னிக்கல் எடிட்டர் ஆகிய பதவி உயர் வுகளைப் பெற்று பணியாற்றலாம்.

அனிமேஷன்

உயிரற்ற ஓவியங்களுக்கும் பொருட்களுக்கும் உயிரூட் டுவதாக அமையும் துறை அனிமேஷன். இதில், இணைய படைப்பாற்றல், துறை மீது தீராத தாகம், கற்பனைத்திறன், படம் மற்றும் ஓவியம் வரையும் திறன் போன்றவை தேவைப்படுகின்றன:

அனிமேஷனில் பிரீ புரடக்ஷன் போஸ்ட் புரடக்ஷன் போன்ற இரண்டு நிலைகள் உள்ளன. பிரீ-புரடக்ஷனில் கதை உருவாக் கம். கையாள வேண்டிய உத்திகள். வண்ண அமைப்பை சோதிப்பது போன்ற பணிகள் உள்ளன. முந்தைய நிலைகளில் கற்பனையில் உருவான எண்ணங்களில் உருவத்தில் கொண்டு வரும் புரடக்ஷன் நிலையே மிகவும் தன்மை மற்றும் சவால்களை உள்ளடக்கிய நிலையாக உள்ளது. போஸ்ட் புரடக்ஷன் நிலையில், கருவாகி உருவான கதைக்கு இறுதி வடிவம் தரப்படுகிறது.

அனிமேஷன் துறையில் விசுவலைசர், 2டி அனிமேட்டர், 3டி அனிமேட்டர், கிராபிக் டிசைனர், கிரியேடிவ் டைரக்டர், வீடியோ கேம் டிசைனர், ஆர்ட் டைரக்டர், கான்செப்ட் ஆர்டிஸ்ட், டெமோ ஆர்டிஸ்ட் ஆகிய பல உட்பிரிவுகள் உள்ளன.

எனவே, அனிமேஷன் படிப்பில் 2டி அனிமேஷன், 3டி அனிமேஷன் ட்ராயிங், ஓடியோ வீடியோ எபெக்ட்ஸ், வெப்




கான்செப்ட்ஸ் போன்ற பகுதிகளில் பயிற்சிகளில் தரப்பட வேண்டும்.

உயர்தரம் முடித்தவர்கள் அனிமேஷனில் பட்டப் படிப்பும் சாதாரண தரம் முடித்தவர்கள் 6 மாத அல்லது 12 மாத கால படிப்புகளையும் மேற்கொள்ளலாம்.

கல்வி கட்டடக்கலை, மருத்து வம், ஏரோஸ்பேஸ், பயோ டெக்னாலஜி, கேமிங் திரைப்படம், ஆட்டோ மொபைல் போன்ற பலதுறைகளுடனும் இத்துறை நெருங்கிய தொட ர்பு கொண்டுள் ளது.



டேட்டாவேர் ஹவுசிங்

இன்றைய நிலையில் தகவல்கள் என்பவை பணத்திற்கு ஈடாக மாறி விட்டன. ஒவ் வொரு நிறுவனமும் அ தன் உள்ளேயும் வெளியேயும் தக வல்களைத் திறம் பட கையாளு வது முக்கியமா கிவிட்டது.

தகவல்களை எலக்ட்ரோனிக் வடிவத்தில் பாதுகாப்பது டேட்டா வேர்ஹவுசிங் எனப்படுகிறது. இதனால், நிறுவனங் களில் விலை மதிப்பற்ற நேரம், செலவு ஆகியவை கட்டுப் படுத்தப்படுகின்றன.

ஸாப்

ஒரு நிறுவனத்தின் பல தரப்பட்ட உள்ளார்ந்த செயல் பாடுகளை ஒருமுகப்படுத்தி நிறுவன செயல்திறனை அதி கரிப்பதில் ஸாப் பெரும்பங்கு காற்றுகிறது.


Enterprise Resource planning என்னும் நவீன முகாமை உத்தியின் முக்கிய பிரிவாக செயல்படுவது ஸாப் தான்.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நிர்வாகத் தில் இதன் பங்கு மிக முக்கிய மானது. மிகக் குறைவான நேரத்தில் மிக துல்லியமான தகவல்களை தருவது தான். இதன் முக் கியப் பணி, நிதி, விற்பனை, பர்சேஸ், இன்வெண்டரி, புரடக்ஷன், ஹெச்.ஆர். போன்றவற்றில் ஸாப் மாடுல்கள் உள்ளன.


ஜாவா, ஜே2ஈஈ

வியாபாரத்திற்கான மாதிரிகளை செயல்படுத்தும் செயலை நிறுவனங்கள் முக்கியமான உத்தியாகச் செய்கின்றன. இதில் ஜே 2 ஈஈ மிகவும் பயன்படுகிறது. எளிமை, எளிதில் புலம் பெயரும் தன்மை, நவீன அள வீட்டு முறைகள் என ஜே2ஈஈ பங்காற்றுவதால் எதிர்காலத்திற்கான முக்கிய துறையாக இது கருதப்படுகிறது.

# சிரித்தால் போட்டோ எடுக்கும் செல்போன்



முதன்முறையாக ஸ்மைல்ஷட்டர் தொழில்நுட்பத்துடன் மொபைல் போன் ஒன்று விற்பனைக்கு வந்துள்ளது. சொனி எரிக்சன் நிறுவனத்தின் சைபர்ஷொட் வரிசையில் வந்துள்ள சொனி சி 510 இந்த பெருமையைத் தட்டிச் செல்கிறது. இத்துடன் ஓட்டோ போகஸ் , பேஸ் டிடக்ஷன், ஆக்டிவ் லென்ஸ் கவர், போட்டோலைட் இமேஜிங் ஷோர்ட்கட்கீகள், 3.2 மெகா பிக்ஸெல் திறன்கொண்ட லென்ஸ், யு-ட்யூப் அப்ளிகேஷன் என பல எதிர்பாராத வசதிகளைக் கொண்டு இந்த போன் வடிவமைக்கப்பட்டுள் ளது.



பார் டைப் மொடலிங் வந்துள்ள இதன் உள் மெமரி 100 எம்பி.எடை 92 கிராம். 8ஜிபி அளவு மெமரி கார்ட்டுகளை இதன்ஸ்லாட்டில் பயன்படுத் தலாம். இதில் வீடியோ அழைப்புக்களுக்கு என இரண்டா வது கமரா தரப்பட்டுள்ளது. ஆர்.டி.எஸ். தொழில் நுட்பத்துடன் கூடிய ஃஎப் எம் ரேடியோ உள்ளது. இந்தப் போனை அறிமுகப்படுத்தும் முகமாக போட்டோ எடுப்பதில் ஆர்வமுள்ளவர்களுக்கு "ஸ்மைல் ஷொட்டர்" சம்பந்தப்பட்ட போட்டி ஒன்றையும் சொனி எரிக்சன் இந்தியாவில் அறிவித்துள்ளது. சிறந்த முறையிலான சிரிப்புகள் மூலம் எடுக்கப்பட்டபோட்டோக்களை எடுத்து அவற்றை www.smilehunter.com என்ற தளத்தில் போட்டிக்கென பதிந்து வைக்கலாம். இந்தப் போட்டி ஒக்டோபர் 31 வரை நடைபெறும்.

# மோட்டார் வாகனப் பொறியியல் 2



மோட்டார் வாகன உற்பத்தி யும், வாகனத் தேவையும் அதிகரித்த வண்ணம் உள்ளன. வாங்கும் திறன் அதிகரிக்க அதிகரிக்க, அதிகமானோர் மோட்டோர் வாகனத்தை வாங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

சமூக அந்தஸ்தை வெளிப்படுத்தும் வகையில் பல் வேறு உயர்ரக மோட்டார் வாகனங்களும் சந்தையில் கிடைக் கின்றன. இப் பிரிவில் பொறியில் படிப்பைப் பயின்றவர்கள் மோட்டார் வாகன உற்பத்திக்கூடங்களில் பணி வாய்ப்பைப் பெறலாம்.

தனியார் போக்குவரத்து நிறுவனங்கள், இராணுவப் பணி, சேவை நிலையங்கள் போன்றவற்றிலும் பணிவாய்ப் புகள் உண்டு.

சுயதொழிலாக மோட் டார்வாகனம், இருசக்கர வாகனம் பழுதுநீக்குதல், பராமரிப்புப் பணிமனை ஆரம்பித்து நடத் துதல் ஆகிய வாய்ப்புகள் உண்டு. நம் நாட்டிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் அதிகமான வேலைவாய்ப்புகள் உண்டு.

மத்திய கிழக்கு நாடுகளின் பணிவாய்ப்புகளும் அதிகம், ஊதியமும் அதிகமாக இருக்கும். திறமையான பொறியாளர்கள் தொடர்ந்து முன்னேறும் வாய்ப்புகள் உள்ளன. (தொடரும்)

# வெளிநாட்டில் ஏன் கல்வி பயில வேண்டும் ?

வெளிநாட்டில் கல்வி பயில வேண்டும் என்பது பலரின் வாழ்நாள் கனவாக உள்ளது. அதனால் வெளிநாட்டுக் கல்வியின் பலன்கள் குறித்து அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

செய்முறை பயிற்சியுடன் கற்க வாய்ப்பு, துறைசார்ந்த பயிற்சி, உலக ளவிலான அங்கீகாரம், மாறுபட்ட சர்வதேச சூழல், நவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகள், சிறப்பாக பாடம் நடத்தும் முறை, உலகளாவிய வேலை வாய்ப்புகள், உலகம் முழுவதும் உள்ள முன்னாள் மாணவர்களுடன் தொடர்பு போன்ற பல்வேறு பயன்கள் அயல் நாட்டு கல்வி மூலம் கிடைக்கின்றன.



அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, அயர் லாந்து, நியூசிலாந்து, சுவிற்சர்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் கல்வி பயில அதிகளவிலான மாணவர்கள் விரும்புகின்றனர்.

தேவையான திறனும், முழுமையான தயார்ப்படுத்தலும் இருந்தால், வெளிநாடுகளில் கல்வி கற்பது மிகவும் எளிமை யானதுதான்.

விதிமுறைகள் ஒவ்வொரு நாட்டுக்கும் வேறுபட்டாலும் சில விடயங்கள் பொதுவானவை. வெளிநாட்டுக்குச் சென்று படிக்க விரும்பும் மாணவன் குறிப்பாக இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

பொருத்தமான பல்கலைக்கழகத்தைத் தேர்வு செய்ய வேண்டும். படிப்புச் செலவு, பாடம், தரவரிசை வேலை வாய்ப்பை கவனத்தில் கொள்ளவேண்டும்.

விசா நடைமுறைகளின் போது நிதி, கல்வித்தகுதி, சொந்த நாட்டில் உள்ள உடைமை கள் போன்றவை குறித்த தகவல்களுடன் தயார் நிலையில் இருக்க வேண் டும்.

மேற்கண்ட இந்த இரண்டு நடைமுறை களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. சரியான திட்டமிடல் இருந் தால் இரண்டு விடயங் களையும் திறம்பட கையா ளலாம்.

முறையாக திட்டமிடாமல் சில மாணவர்கள் சிக்கல்களில் மாட்டிக்கொள்வதை நாம் காண்கிறோம். மாணவருடைய நிதி நிலைமை சரியாக இருக்கின்றன என்பதற்கான ஆதா ரத்தை பல்கலைக்கழகம் மற்றும் தூதரகத்திடம் அளிக்க வேண்டும்.

முதலில் நம்முடைய நிதிநிலைமைய மதிப்பிட்டு, அதற் கேற்ற பொருத்தமான நாட்டையும், பல்கலைக்கழகத்தை யும் தேர்வு செய்வதே புத்திசாலித்தனமாகும்.

S.A. Chandrabavan (Publisher & Teacher) 077-3013062

# புலமைப் புலரி பப்ளிகேஷன் -கொழும்பு

மாணவர்களைபாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் ,மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் 05 மாணவர்களுக்கு வழங்கப்படும்

# மாதிரிப் பரீட்சை -2009

நேரம் :-45 நிமிடம்
வினாப்பத்திரம் (1)
பெற்ற புள்ளி ( )

பரீட்சை இலக்கம் 06

எஸ்.ஏ.சந்திரபவன்

✦01 ஆம் 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள நான்கு படங்களுடனும் பொருந்தும் விடையினைத் தெரிவு செய்க.

1.




1.பயணம் 2.கல்வி 3.வாசிப்பு

2.




1.தரைப்பயணம் 2.ஆகாயப்பயணம் 3.பயணிகள் பயணம்

3. கீழே நான்கு சோடி உருக்கள் தரப்படுகின்றன. அவற்றில் ஒரு சோடி உரு சற்று வித்தியாசமானது. அதன் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.



4. கீழுள்ள மனிதானின் பாவனைப் பொருட்களில் வேறுபட்ட பொருளைத் தெரிவு செய்க.



✦05ஆம் 6ஆம் வினாக்களுக்கு கீழுள்ள கவிதையை வாசித்து விடை தருக.

காகிதத்தில் கப்பல் செய்து
மழைநீரில் ஓடவிட்டு
கண்ணனின் ஆசைகளும்
கப்பலில் மிதக்கின்றதே
மகிழ்ச்சியில் திளைக்கின்றதே

05.கப்பலில் மிதப்பது எது?
1.காகிதம் 2.பொருட்கள் 3.ஆசைகள்

6.காகிதக் கப்பல் என்பது யாது?
1.காகிதங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்
2.ஒருவர் மட்டும் பயணிக்கும் கப்பல்
3.யாரும் பயணிக்க முடியாத கப்பல்

7.நல்ல செயல்களை விட தீய 'செயல்கள் செய்வது இலகுவானது' எனவே
1.இலகுவான தீய செயல்களையே செய்ய வேண்டும்.
2.கடினமான நல்ல செயல்களையே செய்ய முயற்சிக்க வேண்டும்
3.எது இலகுவான செயலோ அதனையே செய்தல் வேண்டும்.

8. !களவெடுத்தாலும் பொய் சொல்லாதே' என்பது பழமொழியாகும். இப்பழமொழியின் கருத்தாக அமையாத விடை எது?
1.பொய் சொல்வது மட்டுமே குற்றமாகும்
2.களவெடுப்பதை விடவும் பொய் சொல்வது மேலான குற்றமாகும்
3.களவெடுத்தாலும் அதை மறைக்கப் பொய் சொல்லக் கூடாது.

✦09 தொடக்கம் 12 வரையான வினாக்களை நன்றாக வாசித்து சரியான விடையின் கீழ் கோடிடுக.

சோமன் எனும் மாணவன், அடிக்கடி ஓடாமல் நிற்பதும், பிழையான நேரத்தை காட்டுவதுமாக இருந்த தனது தந்தையின் கடிகாரத்தை அடிக்கடி கழற்றிச் சரிசெய்யும் முயற்சியை மேற்கொண்டமையால் அக்கடிகாரம் முற்றிலும் செயலிழந்து போனது.


இச் சம்பவத்தின் படி,

9.சோமன் எனும் மாணவன்
1.ஒரு சொல்வழி கேளாத குழப்படிகாரப்பிள்ளை
2.சொத்துக்களை நாசம் செய்யும் பிள்ளை
3.தன் திறமையை வளர்த்துக் கொள்ள விரும்பும் ஒரு பிள்ளை

10.இச் செயல் தொடர்பாக சோமனின் தந்தையோ, தாயோ, செய்யக் கூடிய நடவடிக்கை யாது?
1.அவனது குற்றத்திற்கேற்ப சரியான தண்டனையை வழங்க வேண்டும்
2.அதனைக குற்றமாகப் பார்க்காது அவனது திறமையை வளர்க்க உதவ வேண்டும்.
3.இந்த மாதிரிப் பொருட்களை இனிமேல் தொடக்கூடாது' என எச்சரித்தல் வேண்டும்.

11. ஐங்கரன் தான் பாடாலைக்குச் செல்லும் வழியில் இருந்த ஐந்து ரூபா நாணயத்தை எடுத்துச் சென்று ஆசிரியரிடம் கொடுத்தான். இவனது செயலுக்கான காரணமாக அமைவது
1.இவன் மிகவும் நேர்மையாக வளர்க்கப்பட்ட ஒரு பிள்ளை
2.அது ஆசிரியரின் பணமாக இருந்தமையால்
3.பெரிய தொகைப் பணம் என்றால் இவன் கொடுத்திருக்க மாட்டான்.

12.





Aஎனும் வீடு மலையின் அடிவாரத்திலும் B எனும் வீடு மிக உயர்வான மலையிலும் அமைந்துள்ளன. அதன்படி கீழ்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று எது?

1.வீடு Aயில் உள்ளோர் மீன் பிடித்தொழிலும், வீடு B யில் உள்ளோர் கொழுந்து பறிக்கும் தொழிலும் செய்கிறார்கள்.
2.இரண்டு வீடுகளில் உள்ளவர்களும் கொழுந்து பறிக்கும் தொழில் செய்வர்கள்.
3.இரண்டு வீடுகளில் உள்ளவர்களும் மீன் பிடித்தொழில் செய்வர்கள்.


✦13 ஆம் 14ஆம் வினாக்களில் ஏதோ ஒரு நிகழ்வு ஒழுங்கின்றிக் காணப் படுகின்றது. அதனை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடைகளைத் தெரிவு செய்க.

13.




1) EBDAC 2) EBADC 3) ABDEC

14.




1) ABDEC 2) BDAEC 3) BADEC

✦15ஆம் 16ஆம் வினாக்களின் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க.

15.

| | |
|---|---|
| A-எறி ஆசனத்தில் அமர்ந்தேன் | B -வீதிக்கு வந்தேன் |
| C-பேருந்தை மறித்தேன் | D-பேருந்து நின்றது |

1.CBAD 2.DABC 3.BCDA

16.


| | |
|---|---|
| A-நதி வளைந்து வளைந்து பாய்ந்தது. | B-அருவிகள் சேர்ந்து நதியாக மாறியது |
| C-மலையிருந்து அருவிகள் வீழ்ந்தன | D-பாய்ந்து சென்று கடலுடன் கலந்தது |

1.CBAD 2.DABC 3.CBDA

✦17ஆம் 18ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொல் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு ஏற்ப விடை தருக.

17. அன்றாடத் தேவை

இச் சொல்லுடன் தொடர்புடைய மிகவும் சரியான படத்தைத் தெரிவு செய்க.




18. பொழுதுபோக்கு

இச்சொல்லுடன் முற்றிலும் தொடர்பு அற்ற படத்தைத் தெரிவு செய்க.



✦19ஆம் வினா தொடக்கம் 22 ஆம் வினா வரை கோலங்கள் தொடர்பான வினாக்களில் அடுத்துவரும் கோலத்தை கண்டறிந்து கோடிடுக.

19. இவ் உருத் தொடரில் நான்காவதாக வரவேண்டிய உரு எது?




20.அடுத்து வரக்கூடிய இலக்கத் தொடரைத் தெரிவு செய்க.

357 → 246 → 135 → ?

1. 123 2. 024 3. 013

21.அருகே முதலில் உள்ள ப,க,வ,தி எனும் எழுத்துக்கள் மூலம் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு மூன்றெடுத்துச் சொல் ஆக்க முடியும். எனவே இறுதி எழுத்தாக 'ம்' வரத்தக்க சொற்களை ஆக்குவதற்கு நடு எழுத்துக்க ளாக வரத்தக்க விடை எதுவெனத் தெரிவு செய்க.





22.ஒவ்வொரு சொல்லினதும் முடியும் எழுத்துக்களைக் கொண்டு ஆக் கப்பட்டுள்ள சொற்கோலம் கீழ்வருவனவற்றில் எதுவெனத் தெரிவு செய்க.


1.பாப்பா → பாட்டு → மாடு → டும்டும்
2.திகதி → திறமை → மைனா → மறதி
3.காகா → காசு → சுமை → மைனா


✦23 ஆம் வினா தொடக்கம் 25ஆம் வினா வரை கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

23.முதலில் தரப்பட்டுள்ள உருவிலிருந்து வெட்டி நீக்கப்பட்டுள்ள பகுதி எது வெனத் தெரிவு செய்க.




24. A,B ஆகிய இரண்டு உருக்களையும் எதிர் எதிரே ஒன்று சேர்ப்பதன் மூலம் தோன்றும் உரு எது?




25. 

இவ்வரிப்படம் உணர்த்துவது பின்வருவனவற்றுள் யாதாக இருக்கும்?

1.மிருகம் -பறவை-காகம்
2.பிராணி -மிருகம் -பறவை
3.பிராணி- மிருகம் -குதிரை

✦ 26ஆம் வினா தொடக்கம் 30 ஆம் வினா வரை கேட்கப்பட்டுள்ள வினாக்களை நன்றாக வாசித்து சரியான விடையின் கீழ் கோடிடுக.

26.ஒரு பாடசாலை விளையாட்டுப் போட்டியில் நடைபெறாத ஒரு நிகழ்வு பின்வருவனவற்றுள் எது?
1.ஆசிரியர்கள் ஓடுதல்
2.தேசிய கீதம் பாடுதல்
3.சமயக்கொடி ஏற்றுதல்
4.கேடயம் வழங்குதல

27.பின்வரும் நிகழ்வுகளில் ஏனையவற்றில் இருந்து சற்று வேறுபட்ட நிகழ்வின் கீழ்க் கோடிடுக.
1.திருமண நிகழ்வு
2.மரணச் சடங்கு
3.பூப்புனித நீராட்டு விழா
4.பிறந்தநாள் கொண்டாட்டம்

28.கீழ்வரும் உரைகளில் ஏனையவற்றிலிருந்து வேறுபடும் உரை எதுவெனத் தெரிவு செய்க.
1.கட்டுரை 2.நன்றியுரை 3.தலைமையுரை 4.வரவேற்புரை

29.கீழ்வரும் விழாக்களில் ஆண்டு நிறைவு' விழாவாக அமையாத விழா யாது?
1.நூற்றாண்டுவிழா 2.புத்தாண்டுவிழ
3.வெள்ளி விழா 4.பொன் விழா

30.கீழ்வரும் சேவைகளில் ஒரு மனிதனுக்கு மிக முக்கி[illegible] நும் அத்தியா வசியமானதுமான சேவை எதுவாகும்?
1.தபால் சேவை 2.போக்குவரத்துச் சேவை
3.விமானசேவை 4.வைத்தியசேவை

✦ கீழே உரு உரையாடல் தரப்பட்டுள்ளது. அதனை வாசித்து 31 ஆம் 32ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A -பிறப்புச் சான்றிதழ் பத்திரம் கொண்டு வந்துள்ளீர்களா?
B -அதோ ! அந்த அறையில் சென்று அனுமதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்
C-ஐயா! எனது மகனை இந்தப் பாடசாலையில் அனுமதிக்க வந்துள்ளென்.
D-ஆம் எல்லா விபரங்களும் உள்ளன.

31.உரையாடலை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை யாது?
1.CABD 2.BADC 3.CADB

32.இவ் உரையாடலை யார் யாருக்கிடையில் நடந்திருக்கலாம் என நீர் எண்ணுகிறீர்?
1.ஆசிரியர் -மாணவர் 2.அதிபர்- ஆசிரியர் 3.பெற்றோர் -அதிபர்

33.உங்கள் ஊரில் சிங்களவர், தமிழர்,முஸ்லிம்கள் ஆகியோர் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்தக் கூற்றின் பிரதான கருத்தாக அமைவது யாது?
1.மதஒற்றுமை 2.மொழி ஒற்றுமை 3.இன ஒற்றுமை

34.கீழுள்ள வாக்கியத்தின் சரியான பொருத்தமுடைய முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.
1.பாடம் கற்றுத்தந்தார்.
2.உடற்பயிற்சி கற்றத் தந்தார்
3.ஒழுக்கம் கற்றுத் தந்தார்

✦ கீழ் வரும் வினாக்களின் சரியான விடையினை புள்ளிக்கோட்டில் எழுதுக.

2008ஆம் ஆண்டு 01ஆம் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து
2008ஆம் ஆண்டு 12ஆம் மாதம் 01 ஆம் திகதி வரை

35.முழுமையான மாதங்கள் எத்தனை உள்ளன? (---------------------------)

36.இரண்டுமுறை முழுமையாக இடம்பெறாத மாதம். எது?(--------------------)

திவாகர் எனும் வியாபாரி 1000 கிராம் தேயிலையினை 200 கிராம் பொதி கள் 3உம்,100 கிராம் பொதிகள் 2உம்,ஏனையவை 50 கிராம் பொதிகளாகவும் செய்தான்.

37.எனவே 50 கிராம் பொதிகள் எத்தனை உள்ளன? (---------------------------)

38.மொத்தம் எத்தனை பொதிகள் அடைக்கப்பட்டுள்ளன.(-----------------------)




39.சோமனின் கடிகாரம் சரியான நேரத்திலிருந்து எவ்வளவு விலகியுள்ளது?

(-------------------------------------------)

40.சரியான நேரத்திற்கு நெருங்கிய நேரத்தைக் காட்டுவது யாருடைய கடிகாரம்?


(-------------------------------------------)

## வினாத்தாள் 02 இன் விடைகள்

01) 1.தோழர்கள் 2.வெள்ளை 3.விரிந்து 4.தலைகளை 5.பால் 6.ஏமாற்றும் + அடைந்து
7.உயிர்திணை 8.இரட்டைக்கிளவி/இரட்டைமொழி 9.நரியின்
10. ஒருவரை ஏமாற்ற நினைத்தால் நாமும் ஏமாற வேண்டி வரும்.
02) white 2.For 3.Happy 4.Drink 03. 1.பால் 2.விருந்து 3.நிறம் 4.நண்பர்கள்
04.1) ii 2)ii 3)ii 4)i 5)iii 6.i 7.iii 8.ii 9.i 10. iii
05. I A) 12345 2)54321 2)ஒன்றுக்கள் /ஒன்று 3)495 4)XLV 5)20
06.1)40மி.மீ 2)5 3)250m 4)250g 5)500ml
07.1.(i)மின்கலம் (ii)Aபக்கத்தில் 2.(i) மண்வெட்டி (ii) மண்வெட்டுதல்/கொத்துதல்/கிடங்கு வெட்டுதல்
3.(i)மூங்கில் (ii)இசை/ சத்தம் 4.(i)கரப்பந்தாட்டம் (ii) 6 அல்லது 7
5.(i)ஒலிப்பெருக்கி (ii)கலைநிகழ்ச்சி /கூட்டம்/ திருவிழா/ அறிவித்தல் செய்யும் வாகனத்தில் (இது போன்ற பொருத்தமான)
08. i)843 ii)1234 iii)1183 09. i)220 ii)411 iii)144 iv)1225
10. i) கற்றாளை ii)சதைகரைச்சான் iii)ரோசா
11.1.தாயும் தந்தையும் / அம்மாவும் அப்பாவும் 2.முயற்சி திருவினையாக்கும் 3.(பொத்தமான வாக்கியம்)
4.உணவு 5.i)தொலைவு ii)காட்சி iii)பெட்டி 12) i) ඇස ii) නාසය iii) අත
13 i)பூப்பந்து ii) ரேபிள் ரெனிஸ்/மேசைப்பந்து
14.காலம் ,திணை, பால், எண் போன்றவை அனுசரித்து எழுதியதாகும்.

# அடியார் அல்லல் தீர்க்கும் நயினை நாகபூசணி அம்மன்

சக்தி வழிபாடு உலகின் பல பாகங்களிலும் பரந்த ஒரு வழிபாட்டு முறையாக விளங்கி வருகின்றது. அத்தகைய சக்தி வழிபாட்டுக்குரிய தலங்களில் இலங்கையின் வடபுலத்தில் சப்த தீவுகளில் ஒன்றாகிய நயினாதீவும் ஒன்றாகும்.



சமுத்திரத்தின் மத்தியில் தளிர் போல் விளங்கும் மணித்தீவிலே அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் அமைந்திருப்பதாக மகாகவி காளிதாசன் கூறியுள்ளார். சக்தியின் அருள் பொலிவுற்ற இடங்களே சக்தி பீடங்களாகும். இவ்வுலகிலே இத்தகைய சக்தி பீடங்கள் அறுபத்து நான்கு என்றும் அவற்றில் 18 மிக மிக விசேடமானது என்றும் அவற்றில் ஒன்றாகவே நயினை நாகபூசணி ஆலயத்தை புவனேஸ்வரி பீடம் எனவும், அறிஞர்கள் அழைப்பார்கள்.

மிகப்பழைய காலத்திலேயே நயினாதீவுக்கு அண்மையில் உள்ள புளியந்தீவில் இருந்து நாகம் ஒன்று அம்பாளை அர்ச்சிக்க தினந்தோறும் வரும் போது அம்பாளின் அர்ச்சனைக்குரிய பூக்களைக் கொண்டு வருவது வழக்கம்.

ஒரு நாள் வழக்கம் போல பூவுடன் கடல் வழியாக வந்த நாகத்தினை தாக்க முயன்ற கருடனை அவ்வழியாக வந்த செட்டியார் விலக்கித் தனது கப்பலில் இருந்த திரவியங்கள் அனைத்தையும் கரையிலே சேர்ப்பித்து கோவில் திருப்பணிக்காக செலவிட்டு "நயினார் பட்டர்" என்னும் பிராமணரை பூசைக்கு நியமித்தார். அவர் பெயரே இன்றும் நிலைத்து இத்தீவு நயீனாதீவு என்று அழைக்கப்படுகின்றது. இதன் அறிகுறியாக இன்றும் பாம்பு சுற்றுக்கல்லும் கருடன் கல்லும் கோவிலின் வடக்கே உள்ள கடல் மேல் இப்பொழுதும் பார்க்க முடிகின்றது.

நாகத்தால் பூசிக்கப்பட்ட அம்மையே நாகபூசணி என்றும் பெயர் பெற்றுவிளங்குகிறாள். ஒல்லாந்தர் காலத்தில் இக் கோவில் இடிக்கப்பட்டு சூறையாடப்பட்டது. அத்தருணத்தில் அம்பாளின் திருவுருவம் கோர்விலின் வட மேற்கில் நின்ற ஆலமரப் பொந்திலே மறைக்கப்பட்டது. ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன் இம் மரம் சரிந்து போனது. கோவில் இடிக்கப்பட்ட போது 7 திருவீதிகளும் செப்புத் தேர், பவளத்தேர், வெள்ளித்தேர் என்பன இருந்தனவென்றும் இவை மக்களால் கடலில் தள்ளிவிடப்பட்டன என்றும் கர்ன பரம்பரைக் கதைகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இதன் பின்னர் இக் கோயில் புதிதாக அமைக்கப்பட்டு காலத்திற்கு காலம் பெருப்பிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இயற்கை எழில் மிகுந்த இடங்களே இறைவன் விரும்பி உறையும் இடங்களாகும். இந்த வகையில் நாகம்பிகையின் ஆலயம் நீலத்திரைக்கடல் ஓரத்திலே நலனுடன் அமைந்துள்ளது. இங்கு வீதி எங்கும் வேப்ப மரங்களின் எழில்த் தோற்றத்துடன் வளர்ந்து இறைவியின் இருப்பிடமாய் இயம்புகின்றன. தேவியின் திருக்கண்நோக்கு நீலத்திரைக் கடலில் பரப்புகின்றது. அது திக்கெல்லாம் பரந்து இச் சிறுத் தீவுக்கு அருள் அரண் அமைத்து நிற்கின்றது. இவ் ஆலயக் கருவறையிலே கல்லினாலான 5 தலை நாக உருவமும் அதன் கீழ் லிங்கமும் உள்ளது. ஆராய்ச்சியாளரின் நோக்கின் படி இந் நாகம் மிக மிக தொன்மையானது. இதனை ஆராய்ந்த எம். நரசிம்மன் இதன் தொன்மையை வியந்து கூறியுள்ளார்.

பண்டைய இலங்கை திராவிட மக்கள் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வழிபட்டு வந்தது எனக் கூறப்படும் சிவ வழிபாட்டுக்கும் அனுகூலமாக விளங்குகின்ற நாக வழிபாடு மிகவும் தொன்மையானது என்றும் குறிப்பிடப் படுகின்றது.

நாகதம்பிரானாக நாகபூசணியாக வேறு பல இடங்களிலும் வழிபாடு நடைபெறுகின்றது. 'சர்ப்பம் சக்தியின் சின்னம்' என்பார்கள். சக்தி நாக வடிவில் அன்பர்களுக்கு அருள்புரிந்ததாக கர்ண பரம்பரைக் கதைகள் பல உள. இவ்வாறாக பல்வேறு சிறப்புக்களும் ஒருங்கே அமையப் பெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என அத்தனையும் அமையப்பெற்ற ஒரு அற்புதத் திருத்தலமாக விளங்குவது இத்தலமாகும்.

இன்று இவ் ஆலயத்தில் இரு வாயில்களிலும் ராஜ கோபுரங்களும் புதிய மூன்று தேர்களும் இன்னும் பல்வேறு வகையான திருப்பணி வேலைகளுடன் புதுப்பொலிவுடன் விளங்குவதுடன் பல்வேறு பெருந்தொகை அடியார்களைத் தன் வசம் ஈர்க்கின்ற சிறப்புடன் விளங்கி 23.06.2009இல் பெருவிழாக் காண்கின்றது. தொடர்ந்து 16 தினங்கள் பெருந் திருவிழா உற்சவங்கள் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இவ் வேளையில் நாம் அனைவரும் அம்பிகையின் திருவருள் கடாட்சத்தினைப் பெற்று எமக்கென ஒரு வழியினைக் காட்டி அருளுமாறு பிரார்த்திப்போமாக.

**எஸ்.பி. காசிநாதன்**
(B.A., Dip.in.Edu.,M.Ed)
ஆசிரியர் சென்.ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

# இந்துப் பூசகர் பயிற்சியை வழங்க தமிழக விரிவுரையாளர்கள் வருகை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஜுலை மாதப் பிற்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்கின்ற இந்துப் பூசகர்களுக்கான பயிற்சி நெறியை வழங்குவதற்கென தமிழக விரிவுரையாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

தமிழ்நாடு விஷ்வ ஹிந்து பரிஷத்தின் கிராமக் கோவில் பூஜாரிகள் பேரவையைச் சேர்ந்த மாநில அமைப்பாளர் ஏ.கே. சௌந்தரராஜன், ஆலய வழிபாட்டு முறைப் பயிற்சிகளின் பிரதான ஆச்சாரியார் எஸ். சுவாமிநாத சர்மா, தேவார திருவாசக இசைப் பாடகர் ஏ. ஜீவநாதன், எஸ். சிவராசன் ஆகிய நால்வரும் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வரவுள்ளதோடு பூசகர்களுக்கு இரண்டு வார காலப் பயிற்சியையும் வழங்கவுள்ளனர்.

இப் பயிற்சியின் போது பிரார்த்தனை, யோகாசனம், தியான சுலோகங்கள், அர்ச்சனை நாமாக்கள், சங்கல்பங்கள், அபிஷேக அலங்கார முறைகள், தூப தீப நைவேத்தியம், கற்பூர நீராஞ்சனம், பிரதட்சணம், காயத்ரி மந்திரங்கள், கலச பூஜை, பீட பூஜை, விளக்கு பூஜை, மற்றும் திதிகள், ராசிகள், நட்சத்திரங்கள், ருதுக்கள், ராகுகாலம், எமகண்டம் போன்றனவும், திருக்குறள், திருப்புகழ், திருமந்திரம், தேவாரம், திருவாசகம், திவ்ய பிரபந்தம், அபிராமி அந்தாதி பாடல்கள் போன்ற பல்வேறு அடிப்படை விடயங்களிலும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறி தொடர்பாக ஆலய அறங்காவலர்களுக்கும், பூசகர்களுக்கும், பத்திரிகை விளம்பரங்கள், செய்திகள் மூலம் அறிவிப்புக்களை திணைக்களம் வழங்கியுள்ளது.

எனினும், இதுவரை தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத இந்துப் பூசகர்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். முதற் தடவையாகப் பயிற்சி பெறவுள்ள 40 வயதிற்குட்பட்ட பூசர்களுக்கே முன்னுரிமை வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு 011-2552641, 011-2552642 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். ஓ

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று கொடியேற்றம்

### இடர்களைத் தீர்ப்பாய் அம்மா!

அண்டங்கள் எல்லாம் ஆக்கி
அழகுக்கு வேர்தான் ஆகி
நின்றவள் அன்பின் நெஞ்ச
நேயத்தால் நிறைந்த செல்வி
தொன்மைசேர் நயினை தன்னில்
அருளொளி பரப்பும் தூய
நன்மைசேர் கொடியை ஏற்றி
இடர்களைத் தீர்ப்பாய் அம்மா

கவிமணி கந்த முருகேசதாசனார்

### மடியாத் தவத்தில் மன்னுவரே

துடியேர் இடையாள் தூநயினைக்
கொடிவிழா காணும் கொள்கையினார்
கொடி ஏ றுடையண் ணலைக்கவ
மடியாத் தவத்திலே மன்னுவரே

சிவ. சண்முகவடிவேல்

### அருளோங்கும் அபிராமி

பல்லவி

நடராசன் உடனாடும் நர்த்தகியே – நாக
பூசணியே சிம்ம வாகினியே

அனுபல்லவி

அலையாடும் கடலோரத் தலமிருந்தே – என்றும்
அடியார்க்கு அருளோங்கும் அபிராமியே

சரணம்

இகம்மேவும் இன்னல்கள் தீர்த்தருள்வாய் – இன்பம்
இளைந்தோடும் வாழ்வினை எமக்களிப்பாய்
நிகரில்லா நிர்மல சொரூபினியே – நயினை
புகழோங்கும் திருக்கோவில் சிவகாமியே

கோலாகலங் கண்டு கொடியேறவே – உந்தன்
ஆரோகணாங் காண விழிமேவுதே
பாலாபி ஷேகத்தில் மனங்குளிர்ந்தே – பக்த
அடியார்க்கு அருளோங்கும் பவதாரணி

அல்வாயூர் -சி. சிவநேசன்

### இடர்களையப் போர்க் கொடி

துன்பத்தைக் கண்டாலே வாடி – அவள்
துணை செய்ய வருவாள் ஓடோடி
இன்பத்தைக் கண்டே தான் பாடி – தூய
இதயத்தை நிறைக்கும் முன்னோடி
ஏழைகளைக் கண்டாலே துடிப்பாள் – அவர்
இடர் களையப் போர்க் கொடியும் பிடிப்பாள்
கோழைகளை எதிர்ப்பாள், வெடிப்பாள் – நயினை
நாக பூசணி தமிழினத்தை என்றும் காத்தருள்வாய்.

சைவச் செம்மல் செ. பரமநாதன்
தாவடி.


### வல்லமைகள் தாராயோ வனிதா மணியே

வல்லவளே நல்லவளே நாகபூசணி தாயே
அல்லவைகள் அகன்றிடவே அலைகடலிற் நாயகியே
வல்லமைகள் தாராயோ வனிதா மணியே
மெல்ல வழி காட்டிடுவாய் நாகபூசணி தாயே
புல்லவரும் பூமிதனில் புண்மை நெறி பரப்புவோரும்
சொல்லாமல் சாய்ந்திடவே பூரணியே நீ அருள்வாய்
எல்லையில்லா தன்னருளால் நயினையின் நாயகியே
தொல்லைகள் தொலைந்திட கொடியேற்றி அருள்வாய்.

எஸ்.பி. காசிநாதன் M.E.D.
ஆசிரியர்
சென்.ஜோன்ஸ் கல்லூரி

# ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் கர்ப்பப்பை கட்டிகளை கரைக்கலாம்

பொதுவாக ஹோமியோபதி மருத்துவ முறையில் சிகிச்சை எடுத்துக் கொள்பவர்களுக்கு இந்த முன்ற மருந்துகளால் தீங்கு ஏற்படுவதில்லை. இந்த மருந்துகள் பக்க விளைவுகளையோ அல்லது பின் விளைவுகளையோ ஏற்படுத்துவதில்லை என்பதும் ஒவ்வாமையை உண்டாக்குவதில்லை என்பதும் இந்த மருத்துவ முறையின் கூடுதல் தனிச் சிறப்பு எனலாம்.




கர்ப்பிணிப் பெண்களுக்கும் பிறந்த குழந்தைகளுக்கும் கூட ஹோமியோபதி மருந்துகள் முழுப் பாதுகாப்பானவை. மருந்துகளை உட்கொள்ளும் முறை மிகவும் எளிமையானது. குழந்தைகளும் விரும்பி சாப்பிடக் கூடிய வகையில் இனிமையான சுவையுடன் இம்மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

எல்லா வகையான நோய்களுக்கும் நிரந்தர குணம் அளிக்கும் வகையில் ஹோமியோபதி மருந்துகள் உள்ளன. அந்த வகையில் கர்ப்பப்பை கட்டிகளைக் கரைக்கும் ஹோமியோபதி மருத்துவம் பற்றிப் பார்ப்போம்.

இன்றைய நவீனயுகத்தில் படித்த பெண்களும் அனுபவம் மிக்க நடுத்தர வயதுப் பெண்களும் மாதவிலக்குக் கோளாறுகள் (Menstrual Disorders) கர்ப்பப்பை கோளாறுகள் (Uterine Problems) பாலியல் பிரச்சினைகளுக்கு (Sexual Disorders) முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ள முன் வருவது வரவேற்கத்தக்கதே. ஆனால் சில பெண்கள் இது போன்ற பிரச்சினைகள் அந்தரங்கமாகக் கருதி சிகிச்சை எடுத்துக் கொள்ளத் தயங்குகிறார்கள். வெளியே சொல்வதற்கு சங்கடப்படுகிறார்கள். இதனால் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக நேரிடுகிறது.

Menonthagia எனப்படும் அதிகளவு மாதப்போக்கு Metrohagia எனப்படும் இடைக்கால மாதப்போக்கு, Dysmenorrhea எனப்படும் வலிமிக்க மாதப்போக்கு Amenonea எனப்படும் தடைப்படும் மாதப்போக்கு Leucorrhea எனப்படும் வெள்ளைப்பாடு Oophoritis, Salpingitis, Metrits போன்ற கர்ப்பப்பை சார்ந்த அழற்சிகள், Cysts எனப்படும் நீர்க் கட்டிகள் Uterine Fibroids எனப்படும் கர்ப்பப்பை நார்க்கடிகள், Cervicial polyp, Utenne, Tumours, Myoma எனப்படும் சிறிய, பெரிய தசைக்கட்டிகள், வீக்கம் போன்றவை பரவலாகப் பெண்களிடம் காணப்படும் வியாதிகளில் ஒன்றாக உள்ளது. இதுவே கர்ப்பப்பை கட்டிகள் எனப்படுகின்றன.

பெண்களைத் தாய்மையடையச் செய்யவும் இனப்பெருக்கத்திற்கும் கர்ப்பப்பை அவசியமானதாகும். கர்ப்பப்பையின் ஆரோக்கியமே ஒரு பெண்ணின் முழு உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

எனவே கர்ப்பப்பை தொடர்பான கோளாறுகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அவற்றுக்கு உரிய சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். சாதாரண நிலையில் நோய் இருக்கும்போது அலட்சியப்படுத்திவிட்டால் அந்நோய் முற்றிய நிலையில் வேதனை




அதிகரித்து உடல் பலவீனப்பட நேரிடலாம். நோய் முற்றிப் போனால் எந்த மருத்துவ முறையானாலும் குணப்படுத்துவது சிரமம்.

**காரணங்கள்**

இன்றைய நவீன வாழ்க்கைச் சூழ்நிலைகளாலும் பதற்றம், பரபரப்பு, அவசரங்களாலும் உரங்கள், பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்ட தானியங்கள், காய்கனி போன்றவற்றாலும் உணவுப் பழக்க வழக்கங்களாலும் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமையாலும் கர்ப்பப்பையில் கட்டிகள் ஏற்படுகின்றன. இந்தக் கட்டிகள் புற்று நோய்க் கட்டிகளாகக் கூட இருக்கலாம்.

அதிலும் கடந்த தலைமுறையினரைக் காட்டிலும் இந்த தலைமுறையினரில் குறைவான வயதுடைய பெண்களுக்கு இது போன்ற கட்டிகள் அதிகளவில் காணப்படுகின்றன.

கர்ப்பப்பை கட்டிகளைப் பொறுத்த வரை அலோபதி மருத்துவ முறையில் மருந்து மாத்திரைகள் மூலம் குணமாக்கும் வாய்ப்பு மிகவும் குறைவு என்பதால் கர்ப்பப்பை அறுவைச் சிகிச்சை (Hysterectomy) மூலம் அகற்றப்படுகிறது. ஹோமியோபதி மருத்துவத்தில் முற்றிய நிலையில் உள்ள புற்று நோய்க்கட்டிகள் தவிர மற்ற அனைத்து வகைக் கட்டிகளையும் அறுவைச் சிகிச்சை இல்லாமலேயே குணப்படுத்த முடியும். ஹோமியோபதி மருந்துகள் இது போன்ற கட்டிகள் மீண்டும் உருவாகாமல் தடுப்பதுடன் நோய் எதிர்ப்புத் திறனை அதிகரித்தும் கர்ப்பப்பையின் ஆரோக்கியத்தை மேம்படுத்தியும் கர்ப்பப்பை இயக்கத்தை இயல்பான நிலைக்குக் கொண்டு வருகின்றன.

சினைப்பைகளிலோ (Ovaries), கருக்குழாய்களிலோ (Fallopian Tubes) கர்ப்பப்பையிலோ (Uterus) வீக்கம் (Enlargment) அல்லது கட்டிகள் இருந்தால் அதனால் ஏற்படும் தொல்லைகள் ஏராளம்.

மாதவிலக்குத் தடைப்படுதல் (Suppression of Menses) கட்டுக்கடங்காத அதீத இரத்தப்போக்கு (Profuse Bleeding) இடுப்பு வலி, அடி முதுகுவலி, அடி வயிற்றுவலி, கால்களில் வலி, நடக்க இயலாத பலவீனம், சிறுநீர் கழிப்பதில் சிரமம், பிறப்புறுப்பில் உஷ்ணம், வலி, அதிக வெள்ளைப்பாடு குளிர்சுரம், தலைவலி, இரைப்பைக் கோளாறுகள், உடலிலும் மனதிலும் அமைதியற்ற நிலை (Restlessness) போன்ற பிரச்சினைகளால் ஒவ்வொரு நாளும் வாழ்க்கை துயரமாகி விடும்.

மிகவும் குறைந்த வயதுடைய பெண்களின் சினைப்பையில் நீர்மக்கட்டிகள் இருப்பது தெரிய வந்தால் அலோபதி மருத்துவத்தை விட ஹோமியோபதி மருந்துகளே சிறந்த பலனைத் தரும். சினைப்பையில் நீர்மக் கட்டிகளுக்கு அலோபதி மருந்து, மாத்திரைகளை சாப்பிட்டும் எவ்விதப் பயனும் இல்லாத நிலையில் ஹோமியோபதி மருந்துகள் நல்ல முன்னேற்றத்தை அளித்ததற்கான முன் உதாரணங்கள் ஏராளமாக உள்ளன.

**சிகிச்சை முறைகள்**

கர்ப்பப்பை வீக்கத்தை வலி அல்லது கட்டிகளைக் குணப்படுத்த கோனியம், ஆரம்மெட் கார்போ அனிமாலிஸ், கியோசோட்டம், தைராய்டின் அபிஸ்மெல், லாச்சஸிஸ், கல்கேரியா கார்ப்காலிபுரோம், மூரக்ஸ் போன்ற ஏராளமான மருந்துகள் நோயின் தன்மைக்கேற்ப உள்ளன. மேலும் லக்கானினம் தூஜா, கல்கேரியா புளோர், சிமிசிபியூகா போன்ற மருந்துகளும் கர்ப்பப்பை கட்டி உள்ளவர்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

இயற்கையான வழிமுறைகளில் மனித உடலுக்கும் உள்ளத்திற்கும் எந்த இழப்புமின்றி நோய்களைக் குணப்படுத்த ஹோமியோபதி மருத்துவமே மிகவும் சிறந்த பலனைத் தருகின்றது.

# வெந்தயம் நீரிழிவு நோயை குணப்படுத்துமா?



வெந்தயம் நீரிழிவு நோயை முழுமையாக கட்டுப்படுத்தும் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அது தவறு என்கின்றனர் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

நீரிழிவு நோயை முழுமையாக கட்டுப்படுத்தும் திறன் வெந்தயத்திற்கு இல்லை என்கின்றனர் அவர்கள். ஆனால் அதே நேரத்தில் வெந்தயம் சேர்த்து தயாரிக்கப்பட்ட பண்டங்களை சேர்த்துக் கொண்டால் நீரிழிவைக் குறைக்கும் மருந்துகளின் அளவு குறையுமாம்.

வெந்தயத்தை சிகிச்சையில் ஒரு துணைப் பொருளாக மட்டுமே சேர்த்துக் கொள்ளலாம். அதே நேரத்தில் மற்ற மருந்துகளையும் சிகிச்சை முறைகளையும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்பில் தெரிய வந்திருக்கிறது.

# அளவுக்கு அதிகமான விற்றமின்கள் குழந்தையின் எடையை குறைக்கும்



**கர்ப்பிணிகளின் கவனத்துக்கு...!**

கர்ப்பிணிகளே விற்றமின்களை தவிருங்கள். குழந்தை எடை குறையும் என்பதே தற்போது உலகம் பூராவும் ஒலிக்கும் குரல்களாகும் குழந்தைகள் எடை குறைவாக பிறக்க காரணம், தாய்மீர்கள் தங்கள் கருத்தரிப்பு காலத்தில் அதிக விற்றமின் மாத்திரைகளை சாப்பிடுவதால் தான் என்று மருத்துவ ஆய்வில் தெரியவந்துள்ளது.

லண்டன் பி.பி.சி யின் ஒன்லைன் இதழில் லான்செட் அறக்கட்டளை சார்பில் மருத்துவ ஆய்வு பற்றிய தகவல்கள் வெளிவந்தன.

அதில் கூறியிருப்பதாவது கருத்தரித்த பின்னர் பெண்கள் அதிக அளவில் விற்றமின் மாத்திரை மருந்துகளை சாப்பிடக்கூாது. அப்படி சாப்பிடுவதால் தான் குழந்தைகள் எடை குறைவாகப் பிறக்கின்றன.

கர்ப்பிணிப் பெண்களுக்கு குறிப்பாக விற்றமின் சி மற்றும் ஈ வகை மாத்திரை மருந்துகளை அதிகமாக தரக் கூடாது. ஆனால் இந்த மாத்திரைகளை பல டாக்டர்களும் தருகின்றனர்.

**மற்ற பெண்களைவிட அளவுக்கதிகமாக விற்றமின்களை எடுத்துக் கொள்ளும் கர்ப்பிணிகளுக்கு பிறக்கும் குழந்தைகள்எடை குறைவாக பிறக்க 15 சதவீதம் அதிகமாக வாய்ப்புள்ளது என்றும் மருத்துவ ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது**

கர்ப்பிணிப் பெண்களின் உயர் இரத்த அழுத்தத்தை சீராக்கவே இந்த விற்றமின்கள் தரப்படுகின்றன.

கர்ப்பிணிப் பெண்களுக்கு இரத்த அழுத்தம் வரும் நிலையை ப்ரீ எக் ளெம்சியா என்று மருத்துவ ரீதியாகக் கூறப்படுகிறது.

பிரிட்டனில் ஆண்டு தோறும் கர்ப்பிணிப் பெண்கள் 25 ஆயிரம் பேருக்கு இத்தகைய நிலை ஏற்படுகிறது.

அதனால் விற்றமின் சி.ஈ. மாத்திரைகள் தரப்படுகிறது. இதை சாப்பிட வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதிகமாகத்தான் எடுத்துக் கொள்ளக்கூடாது என்கின்றனர் டாக்டர்கள்.

இப்படி அதிக விற்றமின் மாத்திரைகளை சாப்பிட்ட 1200 கர்ப்பிணிப் பெண்கள் குறித்து அவர்களுக்கு பிரசவம் நடக்க ஒரு வாரம் இருக்கும் போது பரிசோதனை செய்யப்பட்டன.

குழந்தை எடை குறைவாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அது போல அவர்களுக்கு பிறந்த குழந்தை எடை குறைவாகத்தான் இருந்தது.

மற்ற பெண்களை விட இந்த விற்றமின்களை எடுத்துக் கொள்ளும் கர்ப்பிணிகளுக்கு பிறக்கும் குழந்தைகள் எடை குறைவாக பிறக்க 15 சதவீதம் அதிகமாக வாய்ப்புள்ளது என்றும் மருத்துவ ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ ஆலோசனை இல்லாமல் தான் அதிக அளவில் இத்தகைய விற்றமின் மாத்திரைகளை பலரும் எடுத்துக் கொள்கின்றனர்.

அது மிகப் பெருந்தவறு. இதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு பி.பி.சி ஒன்லைன் இதழில் கூறப்பட்டுள்ளது.



பெரும்பாலான தாய்மார்கள் தமக்கு பிறக்கப் போகும் குழந்தை கொழுகொழுவென இருக்க வேண்டும் என்பதற்காக டாக்டர்களின் ஆலோசனை இன்றி கண்ட கண்ட விற்றமின் மாத்திரைகளை வாங்கி உட்கொள்கின்றனர்.

இதுவும் ஒரு வகையில் குழந்தை எடைக் குறைவாக பிறக்கக் காரணமாக அமைந்து விடுகிறது எனவும் டாக்டர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கர்ப்பிணிகள் எக்காரணத்துக்கும் மாத்திரை எடுக்க விரும்பினால் டாக்டர்களின் ஆலோசனையின் பேரிலேயே எடுக்க வேண்டும்.

இல்லாத பட்சத்தில் அது குழந்தையின் உடல் நிலையையே பாதிக்கும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

குற்றங்கள் செய்தவன் பயந்து சாகிறான். அதுவே அவனுக்குத் தண்டனை.

– வால்டேர்

வலம்புரி

## வாங்க மக்காள் வாங்க் தேர்தல் என்றபடியால் உந்தப் பக்கமோ

யாழ்.மாநகரசபைத் தேர்தல் ஏற்பாடுகள் தடல்புடலாக நடக்கிறது. வேட்புமனுத்தாக்கல் செய்வதற்காக அரசியல் கட்சிகள் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளன.

பதவியை பறித்தெடுப்பதில் அவ்வளவு ஆர்வம்– தீவிரம்.

வன்னி யுத்தத்தில் இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் உறவுகளை உடைமைகளை இழந்து முட்கம்பி வேலிக்குள் சிறை அனுபவிக்கின்ற போது யாழ்.மாநகரசபைத் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் நடக்கிறது.

இறைவா! ஈழத்தமிழராக எங்களை படைத்தாய். அது நாம் செய்த பாவம். அதிலும் ஒரு மாபாவம் உண்டு. அதுதான் அவ்வப்போது தண்டலுக்கு வருபவர்கள் போல் எங்களிடம் வாக்குக் கேட்க வரும் எங்கள் அரசியல்வாதிகள்.

தமிழ் மக்கள் இத்துணை துன்பப்படும்போது மாநகரசபைத் தேர்தல் தேவையா?

ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் நெஞ்சுக்கு நீதி உரைப்பவர்களாக இருந்தால் அவர்கள் வவுனியாவில் –மிருசுவிலில், கொடிகாமத்தில், கோப்பாயில் உள்ள முகாம்களிலேயே தங்கியிருக்க வேண்டும்.

என்னினமே இப்படியொரு துயரா? என்று அழுதழுது பணிசெய்ய வேண்டும். ஆனால் நடப்பது வேறு.

இப்போது யாழ்.மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு பட்டாடை அணிந்து பதவி ஏறப் போகிறார்கள்.

என் இறைவா! வன்னியில் தமிழர் துயர் கண்டு தன் உடலை அக்கினியில் எரித்தானே தமிழகத்து முத்துக்குமாரன்.

ஒரு முத்துக்குமாரனா? ஆறு முத்துக்கள் எங்களுக்காக தங்கள் உயிரை உயிரோடு தணல் ஏற்றினர்.

ஆனால் இங்கோ தேர்தலுக்காக களம் அமைத்து பதவிக் கதிரை ஏற துடிக்கிறது ஒரு குழுமம்.

அரசியல் ராஜதந்திரம் இதனை தவறவிட்டால் தமிழர் உரிமை பழுதடையும் என்று மேடையேறி முழங்கலாம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை.

யாழ்.மாநகரசபையில் யார் ஆட்சி ஏறினாலும் தெருவில் நிற்கும் நாயைத்தனிலும் அழிக்க அவர்களால் முடியாது.


வழமைபோல் இரண்டு குப்பை வண்டிகள், கிழமைக்கு ஒரு தடவை என்ற நேர சூசியில் மூச்சிழக்கும் அவ்வளவுதான்.

மீண்டும் அடுத்த பொதுத் தேர்தலில் எங்கள் அரசியல் தலைவர்களை சுவ்பிய கரங்களோடு தரிசிக்க முடியும்.

நல்லூர் தண்டாயுதபாணிக் கந்தா! நீதான் தமிழ்க் கடவுளென்றால், ஒருக்கா உன் வேலை தூக்கி எறி. துன்பம் போகட்டும், தேர்தல் போகட்டும். பதவிப் பேய் போகட்டும், தமிழினம் நிம்மதியாய் வாழட்டும்.

# புலிகளின் இனவாதத்தை ஒழித்த நாம் சிங்கள இனவாதத்திற்கு இடமளியோம்

## அமைச்சர் ராஜித சேனாரட்ன



(கொழும்பு)

இலங்கையில் தமிழ் இனவாதிகளை தோற்கடித்த அரசாங்கம்,சிங்கள இனவாதிகள் எதிர்க்கிறார்கள் என்ற காரணத்திற்காக இனப்பிரச்சினையை தீர்ப்பதென்ற யோசனையை பின்வைக்கப்போவதில்லை என நிர்மாண மற்றும் பொறியியல் அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறினார்.

13–வது திருத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எந்தவிதமான மாற்றமும் இல்லையென குறிப்பிட்ட அமைச்சர், விடுதலைப் புலிகள் என்ற இனவாதிகளைத் தோற்கடித்திருக்கும் நிலையில், சிங்கள இனவாதத்துக்கு இடமளிக்கப்போவதில்லை என தெரிவித்தார்.

அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 13–வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருகி றது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் நாம் கலந்துரையாடி வருகிறோம்.

மாகாணங்களுக்கு குறைந்தளவிலான பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க இணக்கம் காணப்பட்டு வருகிறது என்றார் அமைச்சர்.

13–வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் யாவும் ஆதரவளிக்கும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

(ந–5)

# 13–வது திருத்த சட்டமூலம் அமுலாகுவதை உயிரைக் கொடுத்தும் தடுப்போம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சூளுரை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் 13–வது திருத்தத்தை அமுல்படுத்தி துரோகச் செயல் ஒன்றை செய்ய முற்பட்டால் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், நாட்டின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தாம் அனுமதி வழங்கப்போவதில்லை எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இன ரீதியாக பிரித்து நாட்டின் ஐக்கியத்தை நலிவடையச் செய்யும் சதித்திட்டம் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப் பட்டிருப்பதாக சுட்டிக்காட்டியிருக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சர்வதேச சதிவலைக்குள் இலங்கை சிக்கிவிடக் கூடாது எனவும் எச்சரித்துள்ளது.

இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி யோசனைத் திட்டம் 13–வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமையாது என அக்குழுவின் தலைவரும், அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஆலோசனைப்படியே இந்த யோசனைத் திட்டம் தயாரிக்கப்படுமெனவும் எனினும் 13–வது திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்து விடயங்களிலும் இணக்கப்பாட்டுக்கு வந்துவிட்டன. நாம் தற்பொழுது இறுதி யோசனைகளை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம்.

கூடிய விரைவில் இறுதி யோசனைத் திட்டம் முன்வைக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

(ந–5)

## புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களை தேடி விசேட நடவடிக்கை

(கொழும்பு)

வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைத் தேடி விசேட படையணிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவ்வாறான இரண்டு படையணிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக சில அடர்ந்த காட்டுப்பகுதிகளில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சிறு குழுக்களாக பதுங்கியிருக்கக்கூடும் என இராணுவத்தினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இன்னும் பாரியளவு ஆயுத தளபாடங்கள் காட்டுப்பகுதிகளில் மறைத்து வைத்திருக்கக்கூடும் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு முன்னர் சகல ஆயுத உபகரணங்களையும் மீட்டெடுக்க வேண்டியது இன்றியமையாதது. எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ–6)

## வடபகுதி நலன்புரி நிலையங்களில் கண் பரிசோதனைக்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வட பகுதி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் கண் பரிசோதனைக்காக விசேட நிபுணர்கள் கொண்ட வைத்தியர் குழுவொன்றை அனுப்புவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென 30 பேர் அடங்கிய இரண்டு மருத்துவக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சின் பொதுச்சுகாதாரப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

கண் நோய்க்கு இலக்கான 4ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தற்போது இனம் காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் எதிர்காலத்தில் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மருத்துவக் குழுக்களை ஈடுபடுத்தி பரிசோதனை மேற்கொள் வதற்கு கண் சத்திர சிகிச்சை சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் பரிசோதனைக்கமைய கண் பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொது சுகாதார பிரிவின் பிரதிப்பணிப்பாளர் தெரிவித்தார்.

(ஓ–4)

## செட்டிகுளம் பகுதியில் கள வைத்தியசாலையொன்றை அமைக்க ஐ.சி.ஆர்.சி. நடவடிக்கை

(கொழும்பு)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் தங்கியுள்ள நிவாரணக் கிராமங்களில் உள்ளவர்களின் வைத்திய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஐ.சி.ஆர்.சியும் அந்தப் பகுதியில் கள வைத்தியசாலை ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எவ். என்ற பிரஞ்சு மருத்துவ தொண்டு நிறுவனத்தின் கள வைத்தியசாலை மற்றும் பிரான்ஸ் , இந்தியா ஆகிய நாடுகளின் கள வைத்தியசாலைகள் என்பன ஏற்கனவே இந்தப் பகுதியில் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன செட்டிகுளத்தில் அரச மாவட்ட வைத்தியசாலை ஒன்றும் முகாம்களில் சுகாதார திணைக் களத்தின் வைத்திய பிரிவுகளும் இடம் பெயர்ந்த மக்களின் வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ–6)

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு

### நம்பிக்கை



ஏதனையும் ஏளனமாகச் சிரிப்பதும் எண்ணமும் சிந்தனையின்மையும் நமது நாட்டு மக்களின் இரத்தத்தில் ஊறி வரும் பயங்கரமான நோய். இந்த நம்பிக்கையைப் பற்றுக; ஏனைய யாவும் பின்னே வருவது உறுதி.

உன்னை ஏழையாகவும் நண்பரில்லாதவனாகவும் நினைக்காதே. பணம் மனிதனைப் படைத்ததை யாராவது கண்டதுண்டா? எப்போதும் மனிதனே பணத்தைப் படைப்பவன். உலகம் முழுவதும் ஆக்கப்பட்டது. மனித னது ஆற்றலாலும் ஊக்கத்தின் சக்தியாலும் நம்பிக்கை வலிமையாலுமே.

மதவெறி கொண்டவனின் மன ஊக்கத்துடன், சடப்பொருள் நம்புபவனின் பிரிவும் எனக்கு வேண்டும். கடல்போன்ற ஆழமும்; எல்லையற்ற வானம் போன்ற அகலமும் இம் மாதிரியான நெஞ்சமே நமக்குத்தேவை.

# இரண்டாம் ஆண்டு நினைவு



## அமரர் தங்கராஜா நகுலாவதி

(ஓய்வு பெற்ற இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

**தோற்றம்:- 03.02.1940**

**உதிர்வு:- 15.07.2007**

தாயே ஈரவிழிகளுடன் ஈராண்டு ஓடுகிறது
தண்ணீர் இன்றி நதி ஓடுவதுபோல்
பூ இன்றி செடி நிற்பது போல்
தேடித் தவிக்கின்றோம் மீண்டும் நீ வருவாய்யென...

SRI RAAM SILK
யாழ்ப்பாணம்
உரிமையாளர்:(மகன்)
த.தவநேசன்

என்றும் உம் நினைவோடு வாழும்
கணவன் ,பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
(அங்கலின் ரெக்ஸ்ரைல்)
யாழ்ப்பாணம்.

# சர்வதேச இருபது-20 போட்டிகளிலிருந்து ஓய்வு! யூனிஸ்கான் அறிவிப்பு



(லண்டன்)

சர்வதேச இருபது-20 கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக பாகிஸ்தான் அணித்தலைவர் யூனிஸ்கான் அறிவித்துள்ளார்.

இருபது-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் வென்று கோப்பையை கைப் பற்றிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் அணித்தலைவர் யூனிஸ்கான் இந்த முடிவை அறிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;

எனக்கு 34 வயதாகிறது இருபது-20 போட்டிக்கு இந்த வயது அதிகம் என்று நினைக் கிறேன்.

எனவே இருபது-20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெற திட்டமிட்டுள்ளேன். தொடர்ந்து ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்துவேன்.

பாகிஸ்தானில் திறமை வாய்ந்த இளம் வீரர்கள் பலர் உள்ளனர். இவர்கள் இருபது-20 போட்டிகளில் சிறப்பாக விளையாடுவார் கள். இவ்வாறு அவர் கூறினார்.

# மேற்கிந்தியத்தீவுகள் அணியில் பிரவோ சகோதரர்கள் சேர்ப்பு

(ஜமெக்கா)

மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சென்றுள்ள தோனி தலைமையிலான இந்திய அணி 4 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங் கேற்கிறது.


முதல் இரண்டு போட்டிகள் ஜமெக்காவில் எதிர்வரும் 26,28ஆம் திகதிகளில் நடக்கி றது. முதல் இரண்டு போட்டிகளுக்கான மேற் கிந்தியத்தீவுகள் அணி நேற்று முன்தினம் அறி விக்கப்பட்டது.

இதில் சகலதுறை வீரர் டுவைன் பிரவோ சகோதரர் டயான் பிரவோவிற்கு முதல் முறை யாக ஒருநாள் போட்டியில் விளையாட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வேகப்பந்து வீச்சாளர் பிடெல் எட்வோட்ஸ் காயம் காரணமாக சேர்க்கப்படவில்லை. இவருக்குப் பதிலாக சகலதுறை வீரர் டேவின் பெர்னாரட் வாய்ப்புப் பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி வருமாறு;

ஹயில் (அணித்தலைவர்),ராம்டீன்,லியோ னல் பேகர்,டயான் பிரவோ,டி பிரவோ, பென், டேவிட் பெர்னாட்,சந்தர்போல்,நார் சிங்டியோ



நரைன்,டிவேன ருனாகோ,மோர்டன்,ரவி ராம்பால்,சர்வான்,ஜெரோம்,ரெய்லர்.

# எகிப்தை வீழ்த்தி அமெரிக்கா அரையிறுதிக்கு முன்னேறியது



முதல் அரையிறுதி போட்டியில் நாளை ஸ்பெயின் - அமெரிக்க அணிகள் மோதவுள்ளன.

இதன் இரண்டாவது அரையிறுதியில் நாளை மறுதினம் தென்னாபிரிக்க-பிரேசில் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

கொன்பெடரேஷன் கிண்ண இறுதிப் போட்டி மற்றும் 3 ஆவது இடத்திற்கான ஆட் டங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது.

(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து போட்டியில் எகிப்துக்கு அதிர்ச்சி அளித்த அமெரிக்க அணி அரையிறுதிக்கு முன்னே றியது.

இதன்படி பி பிரிவில் உலக சம்பியன் இத்தாலி மற்றும் ஆபிரிக்க சம்பியன் எகிப்து அணிகள் முதல் சுற்றுடனேயே வெளியேறியது.

கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து போட்டியின் கடைசி லீக் போட்டிகள் நேற்று நடந்தன.

இதில் பி பிரிவில் கடைசி இடத்தில் இருந்த அமெரிக்க அணி அரையிறுதிக்கு முன்னே றும் என எதிர்பார்க்கப்பட்ட எகிப்துடன் மோதியது.

பரபரப்பாக நடந்த ஆட்டத்தில் அமெரிக்க அணி 3:0 என்ற கோல் வித்தியாசத்தில் எகிப்தை வீழ்த்தியது.

இதன் மூலம் அது பி பிரிவில் இருந்து பிரேசிலுடன் அரையிறுதிக்கு முன்னேறியது.

இதேவேளை நேற்று நடந்த இத்தாலி-பிரேசில் அணிகளுக்கிடையிலான போட்டியில் பிரேசில் அணி முழு ஆதிக்கம் செலுத்தி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி யீட்டி யது.

இதனால் இத்தாலி அணியின் அரை யிறுதி எதிர்பார்ப்பு பறிபோனது.

இதன்போது கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து வரலாற்றில் உலக சம்பியன் அணி முதல் சுற்றுடனேயே வெளியேறியது இது இரண்டாவது சந்தர்ப்பமாகும்.

முன்னர் 2003 ஆம் ஆண்டு தொடரில் அப்போதைய உலக சம்பியன் பிரேசில் முதல் சுற்றுடனேயே வெளியேறியமை குறிப் பிடத்தக்கது.

இந்நிலையில் கொன்பெடரேஷன் கிண்ண




# விம்பிள்டன் டென்னிஸ்; 2-வது சுற்றில் சானியா

(லண்டன்)


விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் 2ஆவது சுற்றுக்கு முன் னேறியுள்ளார் இந்திய வீராங்கனை சானியா மிர்சா.

விம்பிள்டன் கிரண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் லண்டனில் நேற்று ஆரம்பமாகியது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் நடந்த போட்டியில் சானியா மிர்சா,ஜெர்மனி வீராங்கனை அன்னா லேனா க்ரோன்பெல்டை எதிர் கொண்டார்.

பரபரப்பாக நடந்த இப் போட்டியில் சானியா 6:2,2:6,6:2 என்ற செட் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இரண்டாவது சுற்றில் சானியா மிர்சா,ரோமானிய வீராங்கனை சோரா சிர்ஸ்டியாவை எதிர்கொள்கிறார்.



# 3-வது இருபது-20 உலகக் கிண்ணம் ஒன்பது மாதங்களில் நடைபெறும்

(லண்டன்)

ஐ.சி.சி. மூன்றாவது உலகக்கிண்ண தொடர் இன்னும் 9 மாதங்களில் நடைபெறு கிறது. 2007ஆம் ஆண்டு முதல் இருபது-20 உலகக் கிண்ண தொடர் தென்னாபிரிக்கா வில் நடத்தப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த தொடரை நடத்த திட்டமிடப் பட்டுள்ளது.

இதன்படி தற்போது 2009இல் இரண்டா வது உலகக் கிண்ணம் நடைபெற்றாலும் மூன்றாவது உலகக் கிண்ணத்தை இன்னும் 9மாதங்கள் கழித்து முன்னதாகவே நடத்தப் படவுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளில் இவ் உலகக் கிண் ணத் தொடர் நடத்தப்படுகிறது. 2010 ஆம் ஆண்டு சம்பியன் கிண்ணப் போட்டியை நடத் தும் வாய்ப்பு மேற்கிந்தியத் தீவுகளுக்கு அளிக் கப்பட்டிருந்தது.

ஆனால் 2008ஆம் ஆண்டு பாகிஸ் தானில் நடைபெற இருந்த சம்பியன்ஸ் தொடர் ரத்து செய்யப்பட்டதால் 2011இல்தான் அடு த்த சம்பியன் தொடரை நடத்த முடியும்.

எனவே சம்பியன்ஸ் தொடரை நடத்தும் வாய்ப்பை பெற்றிருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு இருபது-20 உலகக் கிண்ணத்தை நடத்தும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 91





பெப்சி கிண்ண சர்வதேச ஒருநாள் போட்டி தொடரின் இறுதிப் போட்டியில் இல ங்கை அணி,பாகிஸ்தான் அணியைச் சந் தித்தது.

இத் தொடரில் இரண்டு இறுதிப் போட்டி கள் நடைபெற்றன.

இதில் முதலாவது இறுதிப் போட்டி 1997 ஆம் ஆண்டு மே 24ஆம் திகதி மொகாலி யில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் டுக்களையிழந்து 339 ஓட்டங்களைக் குவித் தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43.5 ஓவர்களில் 224 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் இலங்கை அணி 115 ஓட் டங்கள் வித்தியாசத்தில் வெற்றியடைந்தது.

பந்துவீச்சில் முரளிதரன் 7 ஓவர்கள் பந்து வீசி 48 ஓட்டங்களைக் கொடுத்த போதும் விக் கெட் எதனையும் கைப்பற்றவில்லை.

இந்நிலையில் தொடரின் தீர்க்கமான இரண்டாவது இறுதிப் போட்டி 1997ஆம் ஆண்டு மே 27ஆம் திகதி கொல் கத்தாவில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.4 ஓவர்களில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 309 ஓட்டங்க ளைக் குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முரளியின் சுழலிற்கு ஈடுகொடுக்க முடியாமல் 43.1 ஓவர்களில் 224 ஓட்டங் களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது.

இதன் மூலம் இலங்கை அணி 85 ஓட் டங்களால் வெற்றிபெற்று பெப்சி கிண்ணத் தை சுவைத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களைக் கொடுத்து சலீம் மலிக் (02), மொகமட் வசிம் (20),மொய்ங்கான் (02) ஆகியோரை வெளியேற்றி 3 விக்கெட்டுக்க ளை வீழ்த்தினார்.

# இல்லாத இயக்கத்துக்கு இந்தியாவில் தடை எதற்கு?

## இயக்குநர் சீமான் கேள்வி



விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியா உள்ளிட்ட நாடுகள் தடையை விலக்க வேண்டும். இல்லாத இயக்கம் என்று அறிவித்துவிட்ட பின்னர் புலிகளை தடை செய்வதில் என்ன நியாயம் இருக்கிறது என இயக்குநர் சீமான் தெரிவித்துள்ளார்.

கோவை புலியகுளத்தில் தமிழர் உரிமை முன்னணி சார்பில் ஈழ ஆதரவாளர் மாநாடு, பெரியார் திராவிடர் கழக தலைவர் கொளத்தூர்மணி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு இயக்குநர் சீமான் பேசியதாவது,

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு தடை விதித்திருந்தாலும் அந்த மக்கள் தனி ஈழம் கேட்டு போராட உரிமை தந்திருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் அதற்குக் கூட உரிமையில்லை. எமது இன மக்கள் அங்கே பல்லாயிரக்கணக்கில் செத்து மடிவதை எதிர்த்துக் குரல் கொடுத்தால் சிறையில் அடைக்கிறார்கள்.

ஈழ மக்கள் விடுதலைக்காக குரல் கொடுக்க ஒரு இயக்கம் காண்பதைக் கூட இந்திய அரசினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்க அவுஸ்திரேலிய அரசு மறுத்துவிட்டது. இலங்கையில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது இல்லாத இயக்கத்துக்கு எதற்குத்தடை விதிக்கவேண்டும் என்று இந்திய அரசை அவுஸ்திரேலிய அரசு கேட்கிறது.

அவுஸ்திரேலியாவின் இந்த முடிவை நாங்கள் வரவேற்கிறோம். இதையேதான் இப்போது நாங்களும் கேட்கிறோம். இல்லாத இயக்கத்துக்கு தடை எதற்கு இந்தியாவில்.

இன்றைக்கு பிரபாகரன் குறித்தும், புலிகள் குறித்தும் பலவித கேள்விகள் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் காலம் பதில் சொல்லும் என்றார் சீமான். (ந-5)

### மாநகரசபைத்...

பிரதான அரசியல் கட்சிகள் வேட்பு மனு ஏற்கப்படும் இறுதித் தினத்தில் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளன.

இதனால் விசேட சோதனைச் சாவடிகள் அமைக்கவும் பொலிஸாரை ரோந்துப் பணியில் ஈடுபடுத்தவும் உள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் கூறியது.

வேட்பு மனு ஏற்கப்படும் இறுதித் தினத்தில் இருந்து தேர்தல் தினம் வரை விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் இறு தித் தினமான நாளை மறுதினம் மாவட்டச் செயலகங்களுக்கு அருகிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் கூடுதல் பாதுகாப்பு வழங்க ஒழுங்குகள் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்தது. (ஓ-6)

### ஏ-௯ வீதியில்...

திட்டத்திற்கு அமைய இந்த நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இத் திட்டத்துக்காக 150 மில்லியன் ரூபாவை செலவிட அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இவற்றுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-5)

### இலங்கையர்...

அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகமாக இலங்கையர்கள் தஞ்சம் கோரும் நாடுகளது உரிய அதிகாரிகளுக்கு இது குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகவும் நாட்டில் எந்தவொரு பிரஜையும் அமைதியான முறையில் வாழக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

### வடக்கின்...

தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் திட்டத்திற்கமைய 51வது மற்றும் 52 வது படையணிகளுடன் விசேட படையணி-7 உம் யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவக் கட்டளைத் தலைமையகத்தின் கீழ் யாழ். குடா நாட்டில் நிறுத்தப்படவுள்ளன.

இதேநேரம் முல்லைத்தீவு சாலைப் பகுதியில் பிரிகேடியர் பிரசன்ன சில்வாவின் கட்டளைத் தலைமையில் 55வது படையணி மேலதிக படையணியாக நிறுத்தப்படவுள்ளது. இதுவும் யாழ் மாவட்டத்தளபதி மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்கவின் கீழ் கொண்டு வரப்படும்.

விசேட படையணி-7 ஆனையிறவில் நிறுத்தப்படவுள்ளது. குடா நாட்டில் தற்போது நிறுத்தப்பட்டுள்ள படையினரின் எண்ணிக்கையானது முன்னைய காலங்களில் குடா நாட்டிலிருந்த படையினருடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளதாகவும் படைத் தரப்பு தெரிவித்துள்ளது. (ந-3,5,14)

### யாழ்.மாநகரசபைத்...

முதன்மை வேட்பாளரான பிரபல வர்த்தகர் ஏ.ஏ.எஸ்.சத்தியேந்திரா ஆகியோர் இவ்வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

யாழ்.மாவட்ட செயலக தேர்தல் திணைக்களத்தில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர் ஏ.ஏ.எஸ்.சத்தியேந்திரா,

யாழ்.மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக 28 தமிழ் வேட்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் நான்கு பெண் வேட்பாளர்களும் 12 இளைஞர்களும் அடங்குவர். எம்து கட்சி யாழ்.மாநகர சபைத் தேர்தலில் வெற்றியீட்டி ஆட்சி அமைத்தால் 6 மாதங்களில் யாழ்.நகரை ஒளிமயமான நகரமாக மாற்றியமைப்போம்.

அத்துடன் முதற் கட்டப் பணியாக யாழ். மத்திய பஸ் தரிப்பு நிலையத்தை தென்பகுதியில் உள்ளவற்றைப் போன்று நவீன வசதிகளுடன் சீரமைப்போம்.

கல்வி, சுகாதாரம் உட்பட அனைத்து அடிப்படை வசதிகளும் சீராகக் கிடைப்பதற்கு உறுதி செய்யப்படுமெனக் குறிப்பிட்டார். (ந-5)

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

தேசிய பாடசாலைகளுக்கான தரம் ஒன்று

அனுமதி-2010

2010ஆம் ஆண்டில் தரம் ஒன்றில் பிள்ளைகளை அனுமதிப்பதற்காக விண்ணப்பங்கள் யூலை 15 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை கல்லூரியின் காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

-அதிபர்

(C-2664)

# 13-வது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி விளக்கமளிக்க வேண்டும்

## ஜே.வி.பி. கோருகிறது

(கொழும்பு)

13-வது திருத்தச்சட்டம் தொடர்பில் ஜனாதிபதி நாட்டுக்கு விளக்கமளிக்கவேண்டும் என ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா கேட்டுள்ளார்.

13-வது திருத்தச்சட்டத்தின் அதிகாரப் பகிர்வு நடைமுறைகள், பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து அரசாங்க அமைச்சர்கள் அன்றி ஜனாதிபதியே விளக்கமளிக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 13-வது திருத்தச்சட்டம் குழப்பமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இது நாட்டில் மேலும் குழப்பநிலையையும் சந்தேகத்தையும் தோற்றுவிக்கும்.

எனவே அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்கிறதா? இல்லையா என்பது குறித்து, ஜனாதிபதி மெளனம் கலைத்து தமது விளக்கத்தை நாட்டுக்கு அறிவிக்கவேண்டுமென ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (ந-5,14)

# மூன்று புதிய கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் பதிவு

(கொழும்பு)

மூன்று புதிய அரசியல் கட்சிகள் நேற்று தேர்தல் திணைக்களத்தில் தம்மை உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்துகொண்டுள்ளன.

எமது தேசிய முன்னணி, சிறிலங்கா முற்போக்குக் கட்சி மற்றும் மக்கள் நல முன்னணி ஆகிய கட்சிகள் தம்மை பதிவு செய்துள்ளன.

இதில் எமது தேசியக் கட்சியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர செயற்படவுள்ளார். இந்தக் கட்சியின் சின்னமாக தொலைபேசி விளங்குகிறது.

சிறிலங்கா முற்போக்குக் கட்சியின் தலைவராகவும் செயலாளராகவும் கீர்த்திகுமார குணரட்ண செயற்படவுள்ளார். தபால் உறை இந்தக்கட்சியின் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மக்கள் நல முன்னணியின் சின்னமாக உழவு இயந்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எட்டு அரசியல்கட்சிகள் தம்மை பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பங்களை தேர்தல் செயலகத்தில் கையளித்துள்ளன.

இந்நிலையில் தேர்தல் திணைக்களத்தில் இதுவரை 64 அரசியல் கட்சிகள் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5,14)

### வணங்காமண் கப்பலை...

நின்ற வணங்காமண் கப்பல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது. ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் வன்னித் தமிழர்களுக்காக உணவு, மருந்து, குடிநீர் உள்ளிட்டவற்றை சேகரித்து கப்டன் அலி என்ற சிரியா நாட்டுக் கப்பலில் அனுப்பி வைத்தனர். இந்தக் கப்பலுக்கு வணங்காமண் என்று பெயரிட்டிருந்தனர்.

ஆனால் இந்தக் கப்பலை வன்னிப்பகுதிக்குச் செல்ல விடாமல் இடைமறித்து கொழும்புக்குக் கொண்டு சென்ற கடற்படை, கப்பலை சோதனை இட்டனர். இதில் சந்தேகத்திற்கு இடமான வகையில் எதுவுமில்லை என்று தெரிவித்த இலங்கை அரசு நிவாரணப் பொருட்களை இறக்காமல் திரும்பிப் போய்விடுமாறு உத்தரவிட்டது.

இதையடுத்து சென்னை நோக்கி வந்தது வணங்கா மண். சென்னைத் துறைமுகத்திற்கு 18 கடல் மைல் தொலைவில் நிலை கொண்டது. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் அதன் ஊழியர்கள் குழப்பத்தில் இருந்தனர்.

வணங்காமண் கப்பலில் உள்ள நிவாரணப் பொருட்களை இலங்கைத் தமிழர்களிடம் சேர்ப்பிக்க மத்திய அரசு உதவ வேண்டுமென முதல்வர் கருணாநிதி உள்ளிட்ட தமிழகத் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் கப்பலில் இருந்த ஊழியர்களில் சிலருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. தண்ணீர் கேட்டு அவர்கள் சென்னைத் துறைமுகத்திற்கு தகவல் அனுப்பினர். இதையடுத்து அவர்களிற்கு 200 லீட்டர் தண்ணீர் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் வணங்கா மண் கப்பலை இந்தியக் கடற்படை அதிகாரிகள் திடீரெனச் சோதனையிட்டனர். சோதனைக்குப் பின்னர் வணங்காமண் கப்பல் சந்தேகத்திற்குரியதாக இருப்பதாகவும் இந்தியக் கடல் எல்லையை விட்டு அது செல்ல வேண்டும் எனவும் கப்பல் கப்டனிடம் தெரிவித்தனர்.

இதையடுத்து வேறுவழியின்றி வணங்கா மண் கப்பல் நேற்று சென்னைக் கடல் பகுதியில் இருந்து புறப்பட்டுள்ளது. அநேகமாக அது மறுபடியும் ஐரோப்பாவுக்கே திரும்பிச் செல்லும் வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது.

வணங்காமண் குறித்து சந்தேகமாக இருப்பதாக தெரிவித்துள்ள இந்தியத் தரப்பில், சந்தேகம் குறித்து எதுவும் விரிவாகத் தெரிவிக்கப்படவில்லை. (ந-5)

### புலிகள் புரிந்த போர்க்...

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு வெள்ளைமுள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவ தளபதி தலைமையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அங்கு கருத்து தெரிவித்துள்ள இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளதாவது,

வடக்கில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களின் போது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 27 ஆயிரம் படையினர் படுகாயமடைந்தனர். அத்துடன் அவர்களுள் 6 ஆயிரம் பேர் அங்கவீனமடைந்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் படையினர் நடத்திய தாக்குதல்களின் போது காயமடைந்த புலி உறுப்பினர்கள் எங்கே என்பது கேள்விக்குரிய விடயமாகிறது. இவ்வாறு காயமடைந்த புலி உறுப்பினர்கள் அனைவரும் அவர்களின் தலைமைத்துவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும். அதனாலேயே காயமடைந்த புலி உறுப்பினர்கள் எவரும் படையினரால் கைது செய்யப்படவில்லை.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி அது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை முதலில் இவ்விடயம் தொடர்பிலும் கவனம் செலுத்தி விசாரணைகளை நடத்த வேண்டும். அதன் பின்னர் அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டு தொடர்பில் விசாரிக்க வேண்டும். (ந-5)

**DMI** "வந்தோம்! வென்றோம்!! சென்றோம்!!!" ஜூன் - 27

மீண்டும் ஸ்ரான்லி வீதியில் இணைகின்றோம்.

ஸ்ரான்லி வீதி, யாழ்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.